அலகு 5

# இந்தியாவில் கூட்டாட்சி



AX4P7J

## கற்றலின் நோக்கங்கள்

- கூட்டாட்சி முறையின் தோற்றம், வளர்ச்சி மற்றும் பொருள் ஆகியவற்றை அறிந்துகொள்ளுதல்.
- நமது அரசமைப்பின் கூட்டாட்சி மற்றும் ஒற்றையாட்சி தன்மைகளை அறிதலும்,எவ்வாறு நமது அரசமைப்பு கூட்டாட்சி முறையை ஊக்குவிக்கின்றது என்பதை அறிந்துகொள்ளுதல்.
- சட்டமன்றம், ஆட்சித்துறை, நிதித் துறைகளில் இந்திய அரசமைப்பில் காணப்படும் மத்திய மாநில உறவுகளை ஆய்வு செய்தல்.
- இந்திய அரசமைப்பின் கூட்டுறவுக் கூட்டாட்சி முறையை அறிதல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
- மத்திய மாநில உறவுகளில் காணப்படும் முக்கிய சிக்கல்களையும் கோரிக்கைகளையும் விவாதித்தல்.
- மத்திய மாநில உறவுகள் தளத்தில் பல்வேறு குழுக்கள் வழங்கியுள்ள பரிந்துரைகளை அறிந்துகொள்ளுதல்.
- மாநிலங்களிடையிலான நதிநீர் சிக்கல்களை தீர்ப்பதற்கு நமது அரசமைப்பு வழங்கியுள்ள வழிமுறைகளை மதிப்பீடு செய்தல்.

## 5.1 கூட்டாட்சியின் பொருள்

ஒரு மத்திய அரசாங்கத்திற்கும் பல மாநில அரசாங்கங்களுக்கும் இடையில் அரசமைப்பால் வழங்கப்பட்டுள்ள, பாதுகாக்கப்பட்டுள்ள அதிகாரப் பகிர்வை உடைய அரசியல் முறையை கூட்டாட்சி என்று அழைக்கிறோம். மாநில அரசாங்கங்கள் இருந்தால் மட்டுமே ஒரு அரசியல் முறையை கூட்டாட்சி என அழைக்கக்கூடாது. மாநில அரசாங்கங்கள் அரசமைப்பால் தோற்றுவிக்கப்பட்டால் மட்டுமே நாம் ஒரு அமைப்பை கூட்டாட்சி முறை என்று கூறலாம். பொதுவாக பல வகையான மக்கள் வசிக்கும் நாடுகளில் கூட்டாட்சி முறை பின்பற்றப்படுகிறது. ஒரு நாட்டின் பகுதிகள் இனம், மொழி, மதம் போன்ற காரணங்களால் பல வகை மக்களை பெற்றிருந்தால் கூட்டாட்சி முறை அரசாங்கம் பின்பற்றப்பட வேண்டும். "வேற்றுமையில் ஒற்றுமை" உருவாக்குவதற்கு கூட்டாட்சி முறை மக்களாட்சி நாடுகளில் பின்பற்றப்படுகிறது.

மத்திய மாநில அரசாங்கங்கள் இடையே அதிகாரப் பகிர்வை அரசமைப்பு கூட்டாட்சி முறையில் அமல்படுத்துகிறது. மிகவும் தெளிவாக அதிகாரப் பகிர்வு அரசமைப்பால் உருவாக்கப்படுகிறது.

**கூட்டாட்சி முறையின் பொருள்**




### கூட்டாட்சியின் பரிணாமம்

வட அமெரிக்காவில் 13 காலனிகள் ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக கிளர்ச்சி



12th_Political Science_Tamil_Unit_5.indd 111 04-06-2019 11:50:39

செய்து, அமெரிக்க ஐக்கிய நாடுகள் உருவாக்கின. கூட்டாட்சி அடிப்படையில் அரசமைப்பை உருவாக்கின. உலக வரலாற்றில் முதல் கூட்டாட்சி அரசமைப்பாக அமெரிக்கா தோன்றியது. பின்னர் ஆஸ்திரேலியா, கனடா ஆகிய ஆங்கிலேய காலனிகளும் கூட்டாட்சி முறையை அமைத்துக்கொண்டன. மூன்று மொழிகளை பின்பற்றும் சுவிட்சர்லாந்து கூட்டாட்சி முறையை கொண்டு வந்தது. தற்போது உள்ள ஐரோப்பிய யூனியன் விருப்பத்தின் அடிப்படையில் அமைந்த கூட்டாட்சி முறைக்கு எடுத்துக்காட்டாகும்.

### இந்தியாவில் கூட்டாட்சி முறையும் வளர்ச்சியும்

இந்தியாவில் ஒழுங்குமுறைச் சட்டம் 1773 கூட்டாட்சி முறையின் தோற்றத்தை உருவாக்கியது. சென்னை, கல்கத்தா, மும்பை ஆகிய பிரதேசங்களை கல்கத்தாவில் உள்ள கவர்னர் ஜெனரலின் ஆளுமையின் கீழ்ச் சட்டம் கொண்டு வந்தது. இந்திய தேசிய இயக்கம் இந்தியாவின் பன்முகத் தன்மையை உணர்ந்து கூட்டாட்சி முறையை ஆதரித்தது. இந்திய அரசாங்கச் சட்டம் 1919 இரட்டை ஆட்சியை அறிமுகம் செய்தது. 1935 இந்திய அரசாங்கச் சட்டம் மாநிலங்களுக்கு சுயாட்சியை வழங்கியது. நேரு குழுவின் அறிக்கையும் (1928) ஜவஹர்லால் நேருவின் கருத்துக்களும் கூட்டாட்சி அமைப்பை இந்தியாவிற்கு வலியுறுத்தின. பாகிஸ்தான் உருவாக்கமும் அதன்பின் துயரமான சம்பவங்களும் வலுவான மத்திய அரசு உள்ள கூட்டாட்சி முறையை உருவாக்க காரணமாக இருந்தன. ஜம்மு காஷ்மீர் வரலாற்று காரணங்களில் சிறப்பு அந்தஸ்துடன் உள்ளது.

விடுதலை இந்தியாவின் அரசமைப்பு ஆறாவது பகுதியில் கூட்டாட்சி முறையை வழங்குகிறது. அரசமைப்பின் ஏழாவது அட்டவணை மூன்று பட்டியல்களை உருவாக்கி அதிகாரப்பகிர்வை மத்திய மாநில அரசாங்கங்களுக்கு வழங்குகின்றன.

## இந்திய அரசமைப்பின் கூட்டாட்சி தன்மைகள்

**இந்திய அரசமைப்பு கீழ்க்கண்ட கூட்டாட்சி தன்மைகளைப் பெற்றுள்ளது.**

### 1. எழுதப்பட்ட அரசமைப்பு

கூட்டாட்சி முறைக்கு எழுதப்பட்ட அரசமைப்பு இன்றியமையாததாகும். பல மாநில மத்திய அரசாங்கங்கள் கூட்டாட்சி முறையில் செயல்படுவதால் அவைகளின் அதிகாரங்கள் தெளிவாக வரையறுக்கப்பட்டு இருக்க வேண்டும். தற்போது இந்தியாவில் ஒருமத்திய அரசும், 29 மாநில அரசாங்கங்களும் உள்ளன. இவைகளின் அதிகாரங்களையும் பணிகளையும் அரசமைப்பு தெளிவாக வரையறுக்கின்றது.

### 2. அரசமைப்பின் உயர்வு

அரசமைப்பு நாட்டின் மிக உயர்ந்த ஆவணமாகும். எல்லா அரசாங்கங்களும் அரசமைப்பின் கருத்துக்கள், வழிமுறைகள் மற்றும் பகுதிகள் ஆகியவற்றை பின்பற்ற வேண்டும். எந்த ஒரு அரசாங்கமும், அரசமைப்பை மீறிச் செயல்படக் கூடாது.

### 3. அதிகாரப் பகிர்வு

மத்திய மாநில அரசாங்கங்களுக் கிடையேயான அதிகாரப் பகிர்வு கூட்டாட்சி முறையின் அடிப்படைத் தன்மையாகும். இந்திய அரசமைப்பு மத்திய மாநில அரசாங்கங்களுக்கிடையே அதிகாரப் பகிர்வை விரிவாக வழங்குகிறது. நமது நாட்டில் மூன்று பட்டியல் மூலமாக அதிகாரப் பகிர்வு வழங்கப்படுகிறது. ஆனால் அமெரிக்காவின் கூட்டாட்சி முறையில் ஒரு பட்டியல் மூலமாகத்தான் அதிகாரப் பகிர்வு எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

### 4. ஈரவை நாடாளுமன்றம்

கூட்டாட்சி முறையில் ஈரவை நாடாளுமன்றம் காணப்படுகிறது. நாடாளுமன்றத்திற்கு இரண்டு வகைகள் உள்ளன. இந்தியாவில் நாடாளுமன்றத்தில்

மேலவை மாநிலங்களவை என அழைக்கப்படுகிறது. நாடாளுமன்றத்தின் கீழ் அவை மக்களவை என அழைக்கப்படுகிறது. மாநிலங்களவை மாநில பிரதிநிதிகளை கொண்டுள்ளது. மாநில உரிமைகளின் பாதுகாவலனாக அது கருதப்படுகிறது. உலகம் முழுவதும் நாடாளுமன்றத்தின் மேலவை மாநில உரிமைகளின், நலன்களின் பாதுகாவலனாகச் செயல்படுகிறது.

### 5. நெகிழா அரசமைப்பு

அரசமைப்பின் கருத்துகளை மாற்றுவதற்கு அரசியல் சாசன திருத்தச்சட்ட முறையோ அல்லது தனி அமைப்போ உள்ள அரசமைப்புகளுக்கு நெகிழா அரசமைப்பு முறை என்பது பெயராகும். சாதாரண சட்டம் இயற்றும் முறை மூலமாக அரசமைப்பில் மாற்றங்களை செய்ய இயலாது. இங்கு மாற்றங்களை கொண்டு வருவதற்கு அறுதி பெரும்பான்மையுடன் அரசமைப்பு திருத்தச்சட்டத்தை கொண்டு வர வேண்டும். அரசமைப்பை மாற்றுவதற்கு சாதாரண சட்டம் இயற்றும் முறை போதுமென்றால் மாநிலங்கள் உரிமைகளுக்கு பாதுகாப்பு இருக்காது. மத்திய அரசாங்கமே அரசமைப்பை திருத்தி மாநில உரிமைகளை பறிக்கலாம் என்ற ஆபத்து உள்ளது. நமது அரசமைப்பின் இருபதாவது பகுதியின் 368 உறுப்பில் அரசமைப்பை மாற்றுவதற்கான சிறப்பு திருத்தச்சட்ட முறைகள் வழங்கப்பட்டுள்ளதால் அது நெகிழா அரசமைப்பு என அழைக்கப்படுகிறது.

### 6. உச்ச நீதிமன்றம்

இந்திய உச்ச நீதிமன்றம் கூட்டாட்சி முறையின் நடுவணாகவும், அரசமைப்பின் பாதுகாவலனாகவும் விளங்குகின்றது. அரசமைப்பை விளக்கும் உரிமையை இது பெற்றுள்ளது. மத்திய மாநில உரிமைகளுக்கிடையே முரண்பாடுகள் அல்லது சிக்கல்கள் இருந்தால் உச்ச நீதிமன்றம் தீர்த்து வைக்கின்றது. உச்ச நீதிமன்றத்திடம் தனிபட்ட அதிகாரம் உள்ளது. உச்ச நீதிமன்றம் மட்டும்தான் கூட்டாட்சி வழக்குகளை விசாரித்து தீர்ப்பளிக்கும் அதிகாரத்தை பெற்றுள்ளது. மத்திய அரசாங்கத்திற்கும், மாநில அரசாங்கங்களுக்கிடையிலும் அல்லது வெவ்வேறு மாநில அரசாங்கங்களுக்கிடையிலும் சிக்கல்கள் இருந்தால் உச்ச நீதிமன்றம் மட்டுமே தீர்த்து வைக்கும்.

அதாவது, தமிழ் நாட்டிற்கும் மத்திய அரசாங்கத்திற்கும் அல்லது வேறு மாநில அரசாங்கத்திற்கும் இடையே பிரச்சனை தோன்றினால் அதனை தீர்த்து வைக்கும் அதிகாரம் உச்ச நீதிமன்றத்திடம் மட்டுமே உள்ளது.

மேற்கண்ட காரணிகளின் அடிப்படையில் இந்திய அரசமைப்பை கூட்டாட்சி அரசமைப்பு என கூறுகிறோம்.






12th_Political Science_Tamil_Unit_5.indd 113 04-06-2019 11:50:39

**இந்திய நிலப்பரப்பு** உங்களுக்குத் தெரியுமா?

இந்திய ஒன்றியம் என்ற கருத்து இந்திய நிலப்பரப்பு என்பதிலிருந்து வேறுபட்டதாகும். இந்திய ஒன்றியம் என்பது கூட்டாட்சி முறையில் உள்ள 29 மாநில அரசாங்கங்களையும், மத்திய அரசாங்கத்தையும் குறிக்கும். இந்திய நிலப்பரப்பு என்பது கீழ்க்கண்டவற்றை குறிக்கும்.

- 29 மாநிலங்கள்
- 7 ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகள்
- பெறப்பட்ட பகுதிகள் (சுதந்திரத்திற்குப்பின் இந்திய அரசாங்கத்தினால் முயன்று பெறப்பட்ட பகுதிகள். பாண்டிச்சேரி, டாமன் டையு பகுதிகள் இந்திய அரசால் முயன்று பெறப்பட்டன. அவைகள் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகள் ஆவதற்கு முன்னால் பெறப்பட்ட பகுதிகள் என அழைக்கப்பட்டன).

## இந்திய அரசமைப்பின் ஒற்றையாட்சி தன்மைகள்

இந்திய அரசமைப்பின் ஒற்றையாட்சி மற்றும் கூட்டாட்சிக்கு எதிரான தன்மைகளை பல்வேறு அறிஞர்கள் ஆய்வு செய்துள்ளனர். அமெரிக்காவில் உள்ள பாரம்பரிய கூட்டாட்சி முறையிலிருந்து இந்தியக் கூட்டாட்சி முறை மிகவும் வேறுபடுகிறது.

### 1. ஒற்றை அரசமைப்பு

மத்திய மற்றும் மாநில அரசாங்கங்களுக்கு ஒரே ஒரு அரசமைப்பு தான் உள்ளது. தேசிய அரசமைப்பே மாநிலங்களின் தேவைகளையும் பூர்த்தி செய்கிறது. மாநிலங்களுக்கென்று தனி அரசமைப்பு கிடையாது. ஜம்மு-காஷ்மீர் மாநிலம் இதற்கு விதிவிலக்காகும். வரலாற்று காரணங்களுக்காக ஜம்மு-காஷ்மீர் மாநிலம் தனி அரசமைப்பை பெற்றுள்ளது. இதர மாநிலங்களுக்கு தனி அரசமைப்பு கிடையாது. ஆனால் பாரம்பரிய கூட்டாட்சி நாடான அமெரிக்காவில் மாநிலங்கள் தங்களுக்கான அரசமைப்பை பெற்றுள்ளன.

### 2. ஒற்றைக் குடியுரிமை

நமது நாட்டில் இந்தியக் குடியுரிமை மட்டுமே உள்ளது. தேசியக் குடியுரிமை மட்டுமே அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மாநிலங்களுக்கென்று தனி குடியுரிமை கிடையாது. ஆனால் அமெரிக்காவில் தேசியக் குடியுரிமை மட்டுமல்லாது மாநில குடியுரிமையும் காணப்படுகிறது.

### 3. நெகிழும் அரசமைப்பு

சாதாரண சட்டம் இயற்றும் முறை மூலமாக அரசமைப்பின் பகுதிகளை மாற்ற முடிந்தால் அந்த அரசமைப்பிற்கு நெகிழும் அரசமைப்பு என்பது பெயராகும். இங்கு அரசமைப்பில் மாற்றங்களை கொண்டு வருவதற்கு சிறப்பு அரசமைப்பு திருத்தச்சட்டங்கள் தேவையில்லை. இங்கிலாந்தில் நெகிழும் அரசமைப்பு காணப்படுகிறது. இந்திய அரசமைப்பில் சில முக்கிய பகுதிகளை மாற்றுவதற்கு சாதாரண சட்டம் இயற்றும் முறை அதிகாரத்தை பெற்றிருக்கின்றன. நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மை ஆதரவுடன் இப்பகுதிகளை மாற்ற முடியும்.

### 4. மாநிலங்களுக்கு வாழ்வுரிமை இல்லை

நமது அரசமைப்பு மாநிலங்களுக்கு பெயர் உரிமை மற்றும் வாழ்வுரிமையை வழங்கவில்லை. நாடாளுமன்றம் சாதாரண சட்டங்கள் மூலமாக மாநிலங்களின் பெயர்களையும் நிலப்பரப்புகளையும் மாற்றி அமைக்க முடியும். அரசமைப்பின் 3-வது மற்றும் 4-வது உறுப்புகள் மாநிலங்களை மாற்றவும் புதிய மாநிலங்களை உருவாக்கவும் வழி முறையை வழங்குகின்றன. குடியரசுத்தலைவர் சம்பந்தப்பட்ட மாநிலத்திற்கு தகவலை அனுப்புவார். அந்த மாநிலத்தின் பெயரையோ, நிலப்பரப்பையும் மாற்றுகிறோம் என தகவல் அனுப்புவார். அந்த மாநில சட்டமன்றத்தின் கருத்தை அனுப்புமாறு கூறுவார். ஆனால் மாநில சட்டமன்றத்தின் கருத்து அவரை கட்டுப்படுத்தாது.

பின்னர் ஒரு சாதாரண சட்ட முன்வரைவு நாடாளுமன்றத்தின் மக்களவையிலோ, மாநிலங்களவையிலோ குடியரசுத்தலைவரின் பரிந்துரையின்படி அறிமுகப்படுத்தப்படும். நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்ட பின் அந்த சட்ட முன்வரைவு சாதாரண சட்டமாக அறுதிப் பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றப்படும். இவ்வாறு மாநிலங்களின் பெயர், நிலப்பரப்பு ஆகியவை மாற்றப்படுகின்றன.

ஆனால் அமெரிக்காவில் மாநிலங்களின் பெயர் மற்றும் வாழ்வுரிமைகள் பாதுகாக்கப்பட்டுள்ளன. அமெரிக்காவின் உச்ச நீதிமன்றம் அந்நாட்டின் கூட்டாட்சியை "உடைக்க முடியாத மாநிலங்களால் உருவாக்கப்பட்ட உடைக்க முடியாத நாடு" என்று கூறியது. அமெரிக்காவில் மத்திய அரசை மாநிலங்கள் அழிக்க முடியாது. மாநிலங்களை மத்திய அரசு அழிக்க முடியாது. ஆனால் இந்தியாவில் மாநிலங்களின் நிலப்பரப்பையும், பெயரையும் மத்திய அரசாங்கம் எளிதில் மாற்ற முடியும்.

**செயல்பாடு**

முன்பு சிக்கிம் இந்தியாவுடன் ஒரு "இணை மாநிலம்" என்றழைக்கப்பட்டது என்பது உங்களுக்குத் தெரியுமா?

### 5. கூட்டாட்சிக்கு எதிரான மாநிலங்களவை

பொதுவாக நாடாளுமன்றத்தின் மேலவை மாநில உரிமைகளின் பாதுகாவலனாக பணியாற்றுகின்றது. இந்தியில் ராஜ்ய சபா என்றால் தமிழில் மாநிலங்களவை என்பது பொருளாகும். மாநிலங்களவை மாநிலங்களின் பிரதிநிதிகளால் உருவாக்கப்படுகிறது. மாநில உரிமைகளின் பாதுகாவலனாக பணிபுரிகிறது. ஆனால் மூன்று முக்கிய தளங்களில் மாநில உரிமைகளுக்கு எதிராக மாநிலங்களவை செயல்படுகிறது. மாநிலங்களவையின் அமைப்பு முறையில் சமத்துவம் பின்பற்றப்படவில்லை. இடங்கள் மாநிலங்களின் மக்கள் தொகைக்கு ஏற்றவாறு வழங்கப்பட்டிருக்கின்றன. மிகப்பெரிய மாநிலமாகிய உத்தர பிரதேசத்திற்கு 31 இடங்கள் மாநிலங்களவையில் உள்ளன. ஆனால் நாகாலாந்து போன்ற சிறிய மாநிலங்களுக்கு ஓரிடம் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. பாரம்பரிய கூட்டாட்சி நாடாகிய அமெரிக்காவில் ஒவ்வொரு மாநிலத்திற்கும் இரு இடங்கள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன. சிறிய மாநிலங்கள் பெரிய மாநிலங்கள் என்ற வேறுபாடு கிடையாது.

**தமிழ்நாட்டிற்கு 18 இடங்கள் மாநிலங்களவையில் உள்ளன.**

அரசமைப்பின் 249-வது உறுப்பின் படி ஒரு அதிகாரத்தை மாநில பட்டியலிலிருந்து மத்திய பட்டியலுக்கு மாநிலங்களவையால் மாற்ற முடியும். தேசிய நலன் கருதி மாநிலங்களவை இம்மாற்றத்தை செய்யலாம். வருகை தந்த உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை மற்றும் மொத்த உறுப்பினர்களின் பெரும்பான்மை ஆதரவு முறையின்படி மாநிலங்களவை ஒரு தீர்மானத்தை இயற்றினால் மாநில அதிகாரத்தை மத்தியப் பட்டியலுக்கு ஒரு வருட காலத்திற்கு மாற்றலாம். தேவைப்பட்டால் மீண்டும் மீண்டும் மாற்றத்தை நீட்டிக்கலாம். "வேலியே பயிரை மேய்வது போல" மாநில உரிமைகளின் பாதுகாவலனாகிய மாநிலங்களவையே மாநில உரிமையை பாதிக்கின்றது.

அரசமைப்பின் 312-வது உறுப்பின் கீழ் புதிய அனைத்து இந்தியப் பணிகளை உருவாக்கும் அதிகாரம் மாநிலங்களவைக்கு வழங்கப்பட்டுள்ளது. மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை மற்றும் மொத்த உறுப்பினர்களின் அறுதிப் பெரும்பான்மை ஆதரவுடன் புதிய அனைத்து இந்தியப் பணிகளை உருவாக்கும் அதிகாரத்தை மாநிலங்களவை பெற்றிருக்கின்றது. அனைத்து இந்தியப் பணிகள் மத்திய அரசாங்கத்தின் ஆதிக்கத்தை உருவாக்குகின்றன என்று மாநிலங்கள் குற்றம்சாட்டுகின்றன. இந்திய ஆட்சிப் பணி (ஐ.ஏ.எஸ்), இந்தியக் காவல் பணி



12th_Political Science_Tamil_Unit_5.indd 115 04-06-2019 11:50:40

(ஐ.பி.எஸ்), இந்திய வனப் பணி (ஐ.எஃப்.எஸ்) ஆகியவை முக்கிய அனைத்து இந்தியப் பணிகளாகும். மாநில உரிமைகளை பாதிக்க கூடிய அனைத்து இந்தியப் பணிகளை உருவாக்கும் அதிகாரத்தை மாநிலங்களவை பெற்றிருப்பதை பல மாநிலங்கள் எதிர்க்கின்றன.

### 6. சமமற்ற அதிகாரப் பகிர்வு




நமது அரசமைப்பு சமமற்ற அதிகாரப் பகிர்வை உருவாக்கியுள்ளது என மாநிலங்கள் குற்றம் சுமத்துகின்றன. மத்திய அரசிற்கு சாதகமாகவும், மாநிலங்களுக்கு எதிராகவும் அதிகாரப் பகிர்வு உள்ளதாக பல மாநிலங்கள் கூறுகின்றன. மத்திய அரசாங்கம் மாநிலங்களை விட எண்ணிக்கையில் அதிக அதிகாரங்களை பெற்றுள்ளது. முக்கியமான அதிகாரங்களும் மத்திய அரசிடமே உள்ளன. அதிக வருமானத்தை ஈட்டித் தரும் அதிகாரங்களும் மத்திய அரசிடமே உள்ளன. எண்ணிக்கை, முக்கியத்துவம், வருமானம் ஆகிய காரணிகளில் மாநிலங்கள் பலவீனமான நிலையில் உள்ளன. நிதி ஆதாரத்திற்கு மத்திய அரசையே மாநிலங்கள் சார்ந்துள்ளன. பொதுப் பட்டியல் அதிகாரங்களில் மத்திய அரசு சொல்வதை மாநில அரசாங்கங்கள் கேட்க வேண்டிய நிலை உள்ளது. பட்டியலில் இல்லாத இதர அதிகாரங்கள் நமது அரசமைப்பில் மத்திய அரசாங்கத்திடம் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் பாரம்பரிய கூட்டாட்சி நாடான அமெரிக்காவில் இதர அதிகாரங்கள் மாநிலங்களிடம் வழங்கப்பட்டுள்ளன.

### 7. அவசர காலங்கள்

நமது அரசமைப்பின் 18-ஆவது பகுதியில் உறுப்புகள் 352 முதல் 360 வரை மூன்று விதமான அவசர காலங்கள் விவரிக்கப்பட்டுள்ளன. உறுப்பு 352-ன் படி போர், அந்நிய ஆக்கிரமிப்பு, ஆயுதமேந்திய கிளர்ச்சி போன்றவைகள் இந்தியாவின் ஒற்றுமையை பாதித்தால் குடியரசுத்தலைவர் தேசிய அவசர காலத்தை பிறப்பிக்கலாம். உறுப்பு 356-ன் படி எந்த ஒரு மாநிலத்திலும் அரசியல் சாசன அமைப்பு முறை பாழ்படுத்தப்பட்டால் குடியரசுத்தலைவர் மாநில அரசை நீக்கிவிட்டு அவசர காலத்தை கொண்டு வரலாம். உறுப்பு 360-ன் படி நாட்டின் நிதி நிலைமை மோசமடைந்தால் குடியரசுத்தலைவர் நிதி அவசர காலத்தை பிறப்பிக்கலாம். அவசர காலங்கள் அமலில் இருந்தால் கூட்டாட்சி முறை ரத்து செய்யப்பட்டு ஒற்றை ஆட்சி முறை பின்பற்றப்படும். மாநில உரிமைகள் பாதிக்கப்படும்.

### 8. ஒருங்கிணைந்த நீதித்துறை

இந்திய அரசமைப்பு நீதித்துறையில் கூட்டாட்சி முறையை வழங்கவில்லை. நீதித்துறை ஒருங்கிணைந்த துறையாக உள்ளது. உச்ச நீதிமன்றத்தின் கீழ் உயர் நீதிமன்றம் மற்றும் கீழமை நீதிமன்றங்கள் இயங்குகின்றன. ஒருங்கிணைந்த, படிநிலை அமைப்பு அடிப்படையில் நீதித்துறை உள்ளது. ஆனால் அமெரிக்காவில் நீதித்துறையிலும் கூட்டாட்சி முறை பின்பற்றப்படுகிறது. இந்தியாவில் சட்டமன்றம், ஆட்சித்துறை, நிதி தளங்களில் மட்டுமே கூட்டாட்சியில் இயங்குகிறது. நீதித்துறையில் கூட்டாட்சி இல்லை.

### 9. தேர்தல் ஆணையம்

தேசிய தேர்தல் ஆணையம், நாடாளுமன்ற தேர்தலையும், மாநிலச் சட்டமன்றத் தேர்தலையும் நடத்துகின்றது.



12th_Political Science_Tamil_Unit_5.indd 116 04-06-2019 11:50:40

மாநில சட்டமன்றத்திற்கான தேர்தல்களை நடத்துவதற்கு தனி தேர்தல் ஆணையம் கிடையாது. தேர்தல் முதன்மை அதிகாரி தேசிய தேர்தல் ஆணையம் தலைமையின் கீழ் செயல்படுவார். பாரம்பரிய கூட்டாட்சி நாடுகளில் மத்திய தேர்தலை, தேசிய தேர்தல் ஆணையம் நடத்துகின்றது. ஆனால் நமது அரசமைப்பு ஒருங்கிணைந்த தேர்தல் ஆணையத்தை உருவாக்கியுள்ளது.

**மாநில தேர்தல் ஆணையம்** (உங்களுக்குத் தெரியுமா?)

சென்னையில் உள்ள மாநில தேர்தல் ஆணையம் கூட்டாட்சி முறையின் அங்கம் இல்லை. அவ்வாணையம், 73-வது, 74-வது அரசியல் சாசன திருத்தச்சட்டங்கள் அடிப்படையில் சுயாட்சி அமைப்புகளுக்கு (பஞ்சாயத்து, நகராட்சி அமைப்புகள்) தேர்தலை நடத்துகின்றது.

### 10. ஒருங்கிணைந்த தணிக்கை

இந்திய அரசமைப்பு மத்திய-மாநில அரசாங்கங்களுக்கு ஒருங்கிணைந்த தணிக்கை முறையையும், அமைப்பையும் உருவாக்கி உள்ளது. சி.ஏ.ஜி எனப்படும் தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் அரசமைப்பின் 148-வது உறுப்பின் படி தேசிய மற்றும் மாநில அளவிலான தணிக்கை அதிகாரத்தை பெற்றுள்ளார். இந்தியக் கூட்டாட்சி முறையில் மாநிலங்களுக்கென்று தனியான தணிக்கை அமைப்பு இல்லை.



- நிர்வாக வசதிக்காக நமது நாடும் மக்களும் பல்வேறு மாநிலங்களாக பிரிக்கப்பட்டிருந்தாலும் நமது நாடு ஒருங்கிணைந்த ஒற்றுமையான நாடாகும். ஒரே ஆதாரத்திலிருந்து ஆட்சியின் கீழ் அனைத்து மக்களும் ஒன்றாக ஒற்றுமையாக வசிப்பார்கள்.
- டாக்டர். பி.ஆர்.அம்பேத்கர், தலைவர் வரைவுக்குழு, அரசியல் சாசன நிர்ணயச் சபை

## முடிவுரை

நமது தேசத்தின் அரசியல், வரலாறு, பொருளாதாரம் சமூக நிலைகளை பிரதிபலிக்கும் வகையில் நமது கூட்டாட்சி முறை உருவாக்கப்பட்டுள்ளது. அரசியல் சாசனக் குழு நமது நாட்டின் பன்முக மக்கள் முன்னேற்றத்திற்கு கூட்டாட்சி முறை அவசியம் என்று கருதியது. இருந்தபோதிலும் பிரிவினைவாத சக்திகளை தடுப்பதற்கு வலிமையான மத்திய அரசாங்கம் தேவை என்று அரசியல் சாசனக் குழு முடிவு செய்தது. 1947-ஆம் ஆண்டு பாகிஸ்தான் பிரிந்து பிறகு ஏற்பட்ட துயரமான கலவரங்கள் மீண்டும் நடைபெறக் கூடாது என அரசியல் தலைவர்கள் முடிவு செய்தனர். ஆகவே தேசிய ஒற்றுமைக்கு முதலிடத்தையும், மாநில உரிமைகளுக்கு இரண்டாம் இடத்தையும் கூட்டாட்சி முறையில் வழங்கியிருந்தார்கள். மாநில உரிமையோ, கூட்டாட்சியோ இருந்தபோதிலும் தேசிய ஒற்றுமை நிலைபெற வேண்டும் என்பதே அவர்களின் நோக்கமாகும்.

பேராசிரியர் வேர் இந்தியக் கூட்டாட்சி முறையை பற்றி "இந்தியா ஒரு பாதியளவு கூட்டாட்சி முறையான அரசாங்கம் உள்ள நாடாகும். இந்தியா ஒரு வலுவில்லா கூட்டாட்சி தன்மைகள் உள்ள ஒற்றையாட்சி நாடாகும். அது வலுவான கூட்டாட்சி உள்ள ஒற்றையாட்சி நாடு கிடையாது என்று கூறிப்பிடுகிறார் ".

ரஷ்ய நாட்டைச் சேர்ந்த அரசியல் சாசன அறிஞரான பேராசிரியர் அலெக்ஸாண்ட்ராவிக்ஸ் இந்தியாவின் கூட்டாட்சியை 'தனித்துவமானது' என்று வர்ணித்தார்.

## 5.2 மத்திய – மாநில அதிகாரப் பகிர்வு

அதிகாரப் பகிர்வு மத்திய மாநில உறவுகளின் அச்சாணியாக உள்ளது. மத்திய மாநில அரசாங்கங்களுக்கு இடையே அதிகாரப் பகிர்வு மூன்று தளங்களில் காணப்படுகிறது.


12th_Political Science_Tamil_Unit_5.indd 117 04-06-2019 11:50:40

அ) சட்டமன்ற அதிகாரப் பகிர்வு

ஆ) ஆட்சித்துறை அதிகாரப் பகிர்வு

இ) நிதி அதிகாரப் பகிர்வு

### 5.2.1 சட்டமன்ற அதிகாரப் பகிர்வு

மத்திய மாநில உறவுகளில் சட்டமன்ற அதிகாரப் பகிர்வு இரண்டு தளங்களில் வழங்கப்பட்டுள்ளது.

அ) அதிகாரப் பகிர்வின் எல்லை

ஆ) அதிகாரங்கள் பகிர்வு

#### அ) அதிகாரப் பகிர்வின் எல்லை

மத்திய அரசாங்கத்தின் அதிகாரம் தேசத்தின் எல்லை முழுவதும் காணப்படுகின்றது. மாநில அரசாங்கங்களின் அதிகாரம் மாநில எல்லை மீது காணப்படுகின்றது. மேலும் மத்திய அரசு எல்லைகளை தாண்டிய அதிகாரத்தையும் பெற்றிருக்கின்றது. அதாவது மத்திய அரசு இந்தியாவில் மட்டுமல்ல, உலகின் எந்தப் பகுதியிலும் வசிக்கும் இந்தியக் குடிமகன்கள் மற்றும் அவர்கள் சொத்துக்கள் மீதும் அதிகாரம் செலுத்துகின்றது. ஆனால் மாநில அரசாங்கங்கள் அந்தந்த மாநில எல்லைக்குள் மட்டுமே அதிகாரம் செலுத்துகின்றன. இருந்தபோதிலும் மத்திய அரசாங்கத்தின் அதிகாரத்தை ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகள் மற்றும் பட்டியல் பகுதிகள் மீது பயன்படுத்தும் போது அரசமைப்பே சில கட்டுப்பாடுகளை விதிக்கின்றது.

#### ஆ) அதிகாரங்கள் பகிர்வு

மத்திய மாநில அரசாங்கங்களுக்கு இடையே அரசமைப்பு அதிகாரத்தை மூன்று பட்டியல்கள் மூலம் பகிர்ந்து அளிக்கின்றது.

#### I பட்டியல் ( ஒன்றியப் பட்டியல்)

இங்கு ஒன்றிய அரசு முழு அதிகாரத்தை பெற்றிருக்கும். பாதுகாப்பு, வங்கித்துறை, நாணயம், வெளியுறவுத் துறை உள்ளிட்ட நூறு அதிகாரங்கள் இப்பட்டியலில் உள்ளன.

#### II பட்டியல் (மாநிலப் பட்டியல்)

இப்பட்டியலில் உள்ள துறைகளில் மாநில அரசாங்கங்கள் முழு அதிகாரத்தை பெற்றிருக்கும். இங்கு 59 அதிகாரங்கள் உள்ளன. சட்டம், ஒழுங்கு, பொது சுகாதாரம், சுயாட்சி அமைப்புகள், விவசாயம், வனங்கள் போன்றவைகள் இப்பட்டியலில் இடம்பெற்றுள்ளன.

#### III பட்டியல் (பொதுப் பட்டியல்)

இப்பட்டியலில் 52 அதிகாரங்கள் உள்ளன. கல்வி, திருமணம், குடிமைச் சட்டம் போன்றவைகள் இங்கு இடம்பெற்றுள்ளன. மத்திய மாநில அரசாங்கங்கள் இரண்டுமே இப்பட்டியலில் அதிகாரம் செலுத்துவதால் இப்பட்டியலுக்கு பொதுப் பட்டியல் என்று பெயரிடப்பட்டுள்ளது. இப்பட்டியலில் உள்ள அதிகாரத்தில் மத்திய மாநில அரசுகளுக்கு இடையே முரண்பாடுகள் ஏற்பட்டால் மத்திய அரசாங்கத்தின் சட்டமே செல்லுபடியாகும்.

இம்மூன்று பட்டியல்கள் தவிர இதர அதிகாரங்கள் என்ற வகையும் உள்ளது. இம்மூன்று பட்டியல்களில் இடம்பெற்ற அதிகாரங்கள் எல்லாம் மத்திய அரசாங்கத்தின் ஆளுமையின் கீழ் வருகின்றன. மேற்கண்ட அதிகாரப்பகிர்வை வழங்குவதில் நமது அரசமைப்பு இந்திய அரசாங்கச் சட்டம் 1935-யை பின்பற்றுகின்றது.

#### விதிவிலக்குகள்

மேற்கண்ட அதிகாரப் பகிர்வு பொதுவாக இந்தியாவில் பின்பற்றப்படும். ஆனால் சில சிறப்பு சமயங்களில் மேற்கண்ட அதிகாரப் பகிர்வு நிறுத்தி வைக்கப்படும். இச்சமயங்களில் மாநில அரசாங்கங்களின் அதிகாரங்கள் நீக்கப்பட்டு மத்திய அரசாங்கத்தின் அதிகாரம் அதிகரிக்கப்படும்.

#### அ) தேசிய அவசர காலம்

குடியரசுத்தலைவர் தேசிய அவசரகால சட்டத்தை பிறப்பித்தால் நாடாளுமன்றம் மாநில அதிகாரங்கள் மீது சட்டம் இயற்றும்



12th_Political Science_Tamil_Unit_5.indd 118 04-06-2019 11:50:40

அதிகாரத்தைப் பெறும். போர், அந்திய ஆக்கிரமிப்பு, ஆயுதமேந்திய கிளர்ச்சி போன்ற காரணங்கள் அடிப்படையில் குடியரசுத்தலைவர் தேசிய அவசர சட்டத்தை பிரகடனம் செய்வார். நாட்டிற்கு எதிரான சவால்களை சமாளிப்பதற்கு நாடாளுமன்றத்தின் அதிகாரங்கள் மாநில பட்டியலிலும் செலுத்தப்படும்.

#### ஆ) மாநிலங்களுக்கிடையேயான ஒப்பந்தம்

இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட மாநிலங்கள் தங்களின் நன்மை கருதி ஒரு குறிப்பிட்ட அதிகாரத்தில் மத்திய அரசு தங்களுக்கான பொதுச் சட்டத்தை நிறைவேற்றி தருக என கோரினால் நாடாளுமன்றம் அச்சட்டத்தை நிறைவேற்றித் தரும்.

#### இ) சர்வதேச ஒப்பந்தம்

சர்வதேச ஒப்பந்தங்களை அமல் படுத்துவதற்காக நாடாளுமன்றம் மாநில பட்டியலில் உள்ள அதிகாரத்தில் சட்டங்களை இயற்றலாம்.

#### ஈ) உறுப்பு 356 அவசர காலம்

அரசமைப்பின் 356 உறுப்பின்படி அவசர காலத்தை ஒரு மாநிலத்தில் பிறப்பித்தால் குடியரசுத்தலைவர் அந்த மாநிலத்திற்கான சட்டங்களை நாடாளுமன்றம் இயற்றலாம் என அதிகாரம் வழங்குவார்.

### 5.2.2 ஆட்சித்துறை அதிகாரப் பகிர்வு

நமது அரசமைப்பு மத்திய மாநில அரசாங்கங்கள் இடையே நிர்வாக அதிகாரங்களை பகர்கின்றது. ஏற்கனவே விவரிக்கப்பட்ட சட்டமன்ற அதிகாரப்பகிர்வை பிரதிபலிக்கும் வகையில் ஆட்சித்துறை அதிகார பகிர்வு அமைந்துள்ளது. மத்திய அரசாங்கம் முதலாவது பட்டியலிலுள்ள விஷயங்கள் மீது ஆட்சித்துறை அதிகாரத்தை பெற்றிருக்கின்றது.

இரண்டாவது பட்டியலில் உள்ள விஷயங்கள் மீது மாநில அரசாங்கங்கள் அதிகாரத்தை பெற்றுள்ளன. தேசம் முழுவதும் மத்திய அரசாங்கம் ஆட்சித்துறை அதிகாரம் பெற்றிருக்கின்றது. மாநில அரசாங்கங்கள் அந்தந்த மாநிலங்களில் அதிகாரத்தை பெற்றிருக்கின்றன.

மூன்றாவது பட்டியலான பொதுப் பட்டியலில், ஆட்சித்துறை அதிகார பகிர்வு சற்றே வித்தியாசமாக உள்ளது. பொதுவாக பொதுப் பட்டியலில் விஷயங்களில் நிர்வாக அதிகாரத்தை மாநிலங்கள் பெற்றிருக்கும். ஆனால் தேவைப்பட்டால் மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கங்களுக்கு கட்டளைகளைப் பிறப்பிக்கும். மாநில அரசாங்கங்கள் மத்திய அரசாங்கம் வழங்கும் கட்டளைகளை கண்டிப்பாக இங்கு நிறைவேற்ற வேண்டும்.

நமது கூட்டாச்சி முறையில் மத்திய, மாநில அரசாங்கங்கள் இடையே பணி ஒப்படைப்பு முறை காணப்படுகின்றது. மத்திய அரசாங்கம் மாநில ஆளுநரின் இசைவுடன் தனது நிர்வாகப் பணிகளை நிறைவேற்றுமாறு மாநில அரசாங்கத்திடம் ஒப்படைக்கலாம். மாநில அரசாங்கம் குடியரசுத்தலைவரின் ஆதரவுடன் தனது நிர்வாகப் பணிகளை மத்திய அரசிடம் ஒப்படைக்கலாம். மத்திய அரசு மாநில ஆளுநரின் இசைவு இல்லாமல், நாடாளுமன்றத்தின் அனுமதியுடன் தனது நிர்வாகக் கடமைகளை நிறைவேற்றுமாறு மாநில அரசாங்கத்திடம் ஒப்படைக்கலாம்.

### 5.2.3 நிதி அதிகாரப் பகிர்வு

கூட்டாட்சி முறையின் வெற்றிக்கு நிதி அதிகார பகிர்வு மிகவும் முக்கியமானதாகும். இந்திய அரசமைப்பு மத்திய மாநில அரசாங்கங்கள் இடையே நிதி அதிகாரப் பகிர்வை விரிவாக வழங்குகின்றது. இப்பகிர்வானது இந்திய அரசாங்கச் சட்டம் 1935-யை பெரிய அளவில் பிரதிபலிக்கின்றது. இரண்டு வகையான வருமானங்கள் நிதிப் பகிர்வில் காணப்படுகின்றன.

அ) வரி வருமானப் பகிர்வு

ஆ) இதர வருமானப் பகிர்வு

### அ) வரி வருமானப் பகிர்வு


மத்திய மாநில நிதி பகிர்வில் வரி வருமான பகிர்வு ஐந்து வகைகளில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

1. சுங்கவரி போன்றவைகள் முற்றிலும் மத்திய அரசாங்கத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளன
2. விற்பனை வரி போன்ற வரிகள் முற்றிலும் மாநில அரசாங்கத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளன.
3. சில வரிகளை மத்திய அரசாங்கம் விதிக்கின்றது. மாநில அரசாங்கங்கள் அவ்வரிகளை வசூலித்து பயன்படுத்திக்கொள்கின்றன. முத்திரை வரி, மதுவினால் தயாரிக்கப்பட்ட மருந்துப் பொருட்கள் மீதானக் கலால் வரி போன்றவற்றை எடுத்துக்காட்டுகளாக நாம் கூறலாம்
4. சில வரிகளை மத்திய அரசாங்கம் விதித்து வசூலிக்கிறது. ஆனால் அந்த வருமானம் மாநிலங்களுக்கு வழங்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக செய்தித்தாள்களில் வரும் விளம்பரங்கள் மீதான வரி.
5. சில வரிகள் மத்திய அரசால் விதிக்கப்பட்டு, வசூலிக்கப்பட்டு மாநிலங்களிடையே ப கி ர் ந் த ளி க் க ப் ப டு கி ன் ற ன . எடுத்துக்காட்டாக விவசாய வருமானம் தவிர்த்த பிற வருமானங்கள் மீதான வரி.

### ஆ) இதர வருமானப் பகிர்வு

வரி தவிர இதர வருமான வழிகள் மத்திய மாநில அரசாங்கங்களுக்கு அரசமைப்பால் வழங்கப்பட்டுள்ளன. மத்திய அரசாங்கம் தனக்கான வணிக மற்றும் தொழில் நிறுவனங்களை நடத்தி வருமானத்தை ஈட்டலாம். எடுத்துக்காட்டாக தொழில் நிதி நிறுவனம், ரயில்வே துறை, ஒளிபரப்பு, அஞ்சல் துறை போன்றவற்றை நாம் கூறலாம்.

மாநில அரசாங்கங்கள் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட வணிக, தொழில் நிறுவனங்கள் மூலமாக வருமானத்தை ஈட்டிக் கொள்ளலாம். மின்சாரம், நீர்ப்பாசனம், வனங்கள், தரைவழி போக்குவரத்து போன்ற துறைகளில் மாநில அரசாங்கங்கள் வருமானத்தை ஈட்டலாம்.




### நிதிக் குழு

ஒவ்வொரு ஐந்தாண்டிற்கும் குடியரசுத்தலைவர் ஒரு நிதிக் குழுவை அமைப்பார். அரசமைப்பின் 280-வது உறுப்பு குழுவின் அமைப்பை விவரிக்கின்றது. நிதிக் குழு ஒரு தலைவரையும் நான்கு


12th_Political Science_Tamil_Unit_5.indd 120 04-06-2019 11:50:40

உறுப்பினர்களையும் பெற்றிருக்கும். நிதிக் குழுவின் தலைவர் பொது நடவடிக்கைகளில் (விவரங்கள்) அனுபவம் பெற்றவராக இருப்பார். நிதிக் குழுவின் மூன்று உறுப்பினர்கள் நிதி நிர்வாகம்,பொருளாதாரம், பொதுக் கணக்குகள் மற்றும் அரசு நிதி துறை ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்றிருப்பார்கள். நிதிக் குழுவின் நான்காவது உறுப்பினர் உயர் நீதிமன்ற நீதிபதியாக தகுதிப் பெற்றவர்.


**நிதிக் குழு அரசிற்கு பரிந்துரைகளை கீழ்க்கண்டவாறு வழங்கும்.**

1. வருமானத்தை மத்திய மாநில அரசுகளுக்கிடையே பகிர்தல்.
2. உதவி மானியம் வழங்கப்படும் வழிமுறைகள்.
3. பஞ்சாயத்து அமைப்புகளின் நிதி ஆதாரங்களை வலுப்படுத்தும் நோக்குடன் இந்தியாவின் தொகுப்பு நிதி அதிகரிப்பதற்கான பரிந்துரைகள்.
4. நகராட்சி அமைப்புகளின் நிதி ஆதாரங்களை வலுப்படுத்தும் நோக்குடன் இந்தியாவின் தொகுப்பு நிதி அதிகரிப்பதற்கான பரிந்துரைகள்.
5. குடியரசுத்தலைவரால் நிதி சம்பந்தப்பட்ட விஷயத்தில் கோரப்படும் பரிந்துரைகள்.

இதுவரை 14 நிதிக் குழுக்கள் இந்தியாவில் குடியரசுத்தலைவரால் அமைக்கப்பட்டுள்ளன.

## 5.3 கூட்டுறவுக் கூட்டாட்சி

அமெரிக்காவின் புகழ்பெற்ற அரசமைப்பு நிபுணரான கிரான்வில் ஆஸ்டின் இந்திய கூட்டாட்சியை கூட்டுறவுக் கூட்டாட்சி என வர்ணித்தார். மத்திய மாநில அரசாங்கங்கள் இடையே பரஸ்பர ஒத்துழைப்பை உருவாக்கும் நோக்கத்தில் இந்திய கூட்டாட்சி வடிவமைக்கப்பட்டுள்ளது. அமெரிக்கா போன்ற கூட்டாட்சி நாடுகளில் கூட்டுறவு கொள்கை அமல்படுத்தப்படுகிறது. அரையளவு கூட்டாட்சி கொள்கை கொண்ட நமது அரசமைப்பில் மாநிலங்கள் மத்திய அரசிற்கு ஒத்துழைப்பை நல்க வேண்டும். குடியரசுத்தலைவர் பெற்றிருக்கும் அவசர கால அதிகாரங்களும் அரசமைப்பின் சில பகுதிகளும் மாநில அரசாங்கங்கள் மத்திய அரசுடன் கூட்டுறவு உணர்வுடன் செயல்பட வைக்கின்றன.




இந்திய அரசியலில் பல்வேறு பகுதிகள் அமைப்புகள் மற்றும் நிறுவனங்கள் கூட்டுறவுக் கூட்டாட்சியின் விழுதுகளாக உள்ளன. அவைகளை மூன்று வகைகளாக வகைப்படுத்தலாம்.

அ) அரசமைப்பு நிறுவனங்கள்

ஆ) சட்ட அமைப்புகள்

இ) அரசமைப்புகள்

### அ) அரசமைப்பு பகுதிகள்

அரசமைப்பே பல்வேறு அமைப்புகளை உருவாக்கி கூட்டுறவுக் கூட்டாட்சி முறையை ஆதரிக்கின்றது.

### 1. மாநிலங்களுக்கிடையேயான குழு

அரசமைப்பில் 263 உறுப்பு குடியரசுத்தலைவர் பொது நலனுக்காக மாநிலங்களுக்கிடையேயான குழுவை உருவாக்கலாம் என்று கூறுகின்றது.

மூன்று பணிகளை இக்குழு பெற்றிக்கின்றது.

- ❖ மாநிலங்களுக்கிடையேயான சிக்கல்களை ஆராய்ந்து ஆலோசனை வழங்குவது.
- ❖ மத்திய மாநில அரசாங்கங்களுக்கிடையிலான பொதுவான விஷயங்களை விவாதிப்பது.

* ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் மாநிலங்களுக்கிடையேயான ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கு பரிந்துரைகளை வழங்குதல்.

மாநிலங்களுக்கிடையேயான ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கு பல குழுக்கள் இதுவரை உருவாக்கப்பட்டுள்ளன. மத்திய சுகாதாரக் குழு, போக்குவரத்து வளர்ச்சி மன்றம், தல சுயாட்சி மத்தியக் குழு போன்றவைகள் எடுத்துக்காட்டுகளாகும்.

சர்க்காரியா குழுவின் பரிந்துரைப்படி 1990-களில் கூட்டாட்சி முறையில் உள்ள அரசாங்கங்கள் இடையே எல்லா துறைகளிலும் பரஸ்பர ஒத்துழைப்பை அதிகரிப்பதற்காக மாநிலங்களுக்கிடையேயான குழு தோற்றுவிக்கப்பட்டது. பிரதமர் இக்குழுவின் தலைவராக இருக்கின்றார். எல்லா மாநிலங்களின் முதல்வர்களும், ஒன்றிய ஆளுகைக்குட்பட்ட பகுதிகளின் முதல்வர்களும், ஆறு ஒன்றிய அமைச்சரவை குழுக்களும், ஒன்றிய ஆளுகைக்குட்பட்ட பகுதிகளின் நிர்வாகத் தலைவர்களும், குடியரசுத்தலைவர் ஆட்சியில் இருக்கும் மாநிலங்களின் ஆளுநர்களும் இக்குழுவில் உறுப்பினர்களாக இருக்கின்றனர். மாநிலங்கள் இடையில் பரஸ்பர ஒத்துழைப்பை அதிகரிக்க மத்திய உள்துறை அமைச்சர் தலைமையில் ஒரு நிலைக் குழுவும் உருவாக்கப்பட்டது. இக்குழுவில் மத்திய உள்துறை அமைச்சர் தவிர ஐந்து மத்திய அமைச்சர்கள் குழு, ஒன்பது மாநில முதல்வர்களும் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

### ஆ) சட்ட அமைப்புகள்

நாடாளுமன்றத்தின் சட்டங்களால் உருவாக்கப்பட்ட பல அமைப்புகளும் கூட்டுறவுக் கூட்டாட்சியை வலுப்படுத்துகின்றன.

#### 1. மண்டலக் குழுக்கள்

மண்டலக் குழுக்கள் மாநிலங்கள் மறுசீரமைப்புக் குழு 1956 சட்டத்தின் மூலம் தோற்றுவிக்கப்பட்டன. மொழிவாரியான மாநிலங்கள் உருவானபோது மண்டலக் குழுக்களும் உருவாயின. சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமரான ஜவஹர்லால் நேரு மண்டலக் குழுக்களின் நோக்கம் கூட்டுறவுக் கூட்டாட்சி வழக்கத்தை வளர்ப்பது என்றார்.

ஆரம்பத்தில் ஐந்து மண்டலக் குழுக்கள் தோற்றுவிக்கப்பட்டன. 1971 ஆம் ஆண்டு வட கிழக்கு மாநிலங்களுக்காக சிறப்பு மண்டலக் குழு உருவாக்கப்பட்டது. தற்பொழுது ஆறு மண்டலக் குழுக்கள் இயங்குகின்றன.

1. வடக்கு மண்டலக் குழு
2. தெற்கு மண்டலக் குழு
3. கிழக்கு மண்டலக் குழு
4. மேற்கு மண்டலக் குழு
5. மத்திய மண்டலக் குழு
6. வட கிழக்கு மண்டலக் குழு

மத்திய உள்துறை அமைச்சர் எல்லா மண்டலக் குழுக்களின் பொதுத் தலைவராக உள்ளார். மேலும் ஒவ்வொரு மண்டலக் குழுவிலும் ஒவ்வொரு மாநிலத்தின் முதல்வர் மற்றும் இரண்டு அமைச்சர்களும் ஒன்றிய ஆளுகைக்குட்பட்ட பகுதியில் நிர்வாகத் தலைவரும் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

மண்டலங்களில் உள்ள மாநிலங்களுக்கிடையேயான எவ்வாறு ஒத்துழைப்பையும் முன்னேற்றத்தையும் உருவாக்கி வளர்ப்பது என்று மண்டலக் குழுக்கள் பரிந்துரை வழங்கும். பொருளாதார, சமூகத் திட்டமிடல், எல்லை பிரச்சனைகள், போக்குவரத்து போன்ற துறைகளில் பரஸ்பர ஒத்துழைப்பை வழங்க மண்டலக் குழுக்கள் செயல்படும்.

#### 2. நதி ஆணையம்

நதி ஆணையங்கள் சட்டம் 1956 மாநிலங்களுக்கிடையேயான நதிகளை மேலாண்மை செய்வதற்கு மாநிலங்களுக்கு பரிந்துரைகள் வழங்குவதற்கு நதி ஆணையத்தை உருவாக்கியது.

### 3. நதிநீர் தீர்ப்பாயம்

மாநிலங்களுக்கிடையேயான நதி நீர் சிக்கல் சட்டம் 1956 அரசமைப்பின் உறுப்பு 262 இன் படி உருவாக்கப்பட்டது. சமவெளி மாநிலங்களுக்கிடையேயான நதி நீர் குறைகளை ஒழுங்குபடுத்துவது இச்சட்டத்தின் நோக்கமாகும். இவ்வகையான பிரச்சனைகளை தீர்ப்பதற்கு தீர்பாயங்களை இச்சட்டம் உருவாக்குகின்றது.

## இ) அரசமைப்புகள்

### நிதி ஆயோக் (NITI AAYOG)

மத்திய அரசாங்கம் 2015-ம் ஆண்டு நிதி ஆயோக் என்ற அமைப்பை தோற்றுவித்தது. இந்தியாவின் மாற்றத்திற்கான தேசிய குழு என்பது இதன் பொருள் ஆகும். திட்டக் குழு நீக்கப்பட்டப் பிறகு இப்புதியக் குழு தோற்றுவிக்கப்பட்டது. பிரதமர் இக்குழுவின் தலைவராக இருப்பார். மாநிலங்களின் முதல்வர்கள், ஒன்றிய ஆளுகைக்குட்பட்ட பகுதிகளின் முதல்வர்கள் (புதுச்சேரி, புதுதில்லி), அந்தமான் நிக்கோபர் தீவுகளின் துணை ஆளுநர் ஆகியோர் இக்குழுவின் நிரந்தர உறுப்பினர்களாக செயல்படுவார்கள். மாநிலங்களுக்கிடையேயான அமைப்பு ரீதியாக தொடர்ச்சியாக கூட்டுறவுக் கூட்டாட்சியை வளர்ப்பது இக்குழுவின் நோக்கமாகும். உறுதியான மாநிலங்கள் உறுதியான தேசத்தை உருவாக்கும் என்பது இக்குழுவின் எண்ணமாகும். வருமான ஆதாரங்கள் இல்லாததாலும் அரசமைப்பு சக்தி இல்லாததாலும் மாநிலங்கள் மத்திய அரசை சார்ந்து இயங்குகின்றன. இயற்கை பேரழிவுகளை சமாளிப்பதற்கு கூட மத்திய அரசை சார்ந்து இருக்கின்றன. இந்நிலையை மாற்ற வேண்டும் என்பது நிதி ஆயோக்கின் நோக்கமாகும்.

## 5.4 மாநிலங்களுக்கிடையேயான நதி நீர் பிரச்சனை

இந்திய அரசமைப்பின் கூட்டாட்சி முறையை மாநிலங்களுக்கிடையிலான நதிநீர் சிக்கல்கள் பெரிய அளவில் பாதிக்கின்றன. பல்வேறு நதிநீர் சிக்கல்கள் நமது நாட்டில் காணப்படுகின்றன. தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா, புதுச்சேரி ஆகியவை காவிரி பிரச்சனையில் சம்பந்தப்பட்டுள்ளன. ஆண்டாண்டு காலமாக நதிநீர் பிரச்சனையில் ஒடிசா, ஆந்திரப் பிரதேசம் சம்பந்தப்பட்டுள்ளன. சட்லெஜ் ஆறு பிரச்சனையில் பஞ்சாப், அரியானா சம்பந்தப்பட்டுள்ளன. கோவா, மஹாராஷ்டிரா, கர்நாடகம் ஆகியவை மகாதயி ஆற்றுப் பிரச்சனையில் சம்பந்தப்பட்டுள்ளன.

மாநிலங்களுக்கிடையேயான நதி நீர்ப் பிரச்சனைகளை தீர்ப்பதற்கு இந்திய அரசியலில் கீழ்கண்ட அணுகுமுறை பின்பற்றப்படுகிறது.

### 1. அரசமைப்பும் மாநிலங்களுக்கிடையேயான நதி நீர் சிக்கல்களும்

அரசமைப்பின் 262 இன் உறுப்பு மாநிலங்களுக்கிடையேயான நதி நீர்ப் பிரச்சனைகள் தீர்ப்பதற்கு வழிமுறையை வழங்குகின்றது. இவ்வகையான பிரச்சனைகள் உச்ச நீதிமன்றத்தின் அதிகார வரம்பில் இருந்து நாடாளுமன்றம் விலக்கி வைக்கலாம். நாடாளுமன்றம் நதி நீர்ப் பிரச்சனைகள் சம்பந்தமாக ஒரு சட்டத்தை இயற்றலாம். நதி நீர் பிரச்சனை பல இலட்சம் மக்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கின்றது. நீதிமன்றங்கள் தீர்ப்பை வழங்கினால் மக்களிடையே கசப்புணர்வும் பிளவும் அதிகரிக்கலாம். ஆகவே சுமூகமான பேச்சு வார்த்தை மூலமாக நதிநீர்ப் பிரச்சனைகளை நாம் தீர்க்க வேண்டும் என்பது அரசமைப்பின் உறுப்பு 262 இன் நோக்கமாகும்.

### 2. மாநிலங்களுக்கிடையேயான நதி நீர் சிக்கல்கள் சட்டம் 1956

மாநிலங்களுக்கிடையேயான நதி நீர் சிக்கல்கள் சட்டம் 1956 நாடாளுமன்றத்தால் உருவாக்கப்பட்டது. நதி நீர்ப் பிரச்சனையை தீர்ப்பதற்கு மத்திய அரசாங்கம் தீர்ப்பாயங்களை அமைக்கலாம் என்று இச்சட்டம் வழிவகுக்கின்றது. நதி நீர்ப் பிரச்சனைகள் பேச்சு வார்த்தைகள் மூலமாக




12th_Political Science_Tamil_Unit_5.indd 123 04-06-2019 11:50:40

தீர்க்கப்பட வேண்டும். பேச்சு வார்த்தை முயற்சிகள் தோல்வி அடைந்தால் சம்பந்தப்பட்ட மாநிலங்கள் மத்திய அரசாங்கத்தை நாடலாம். மத்திய அரசாங்கம் குறிப்பிட்ட நதிநீர்ப் பிரச்சனையை தீர்ப்பதற்கு ஒரு தீர்ப்பாயத்தை அமைக்கும்.

உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி அந்த தீர்ப்பாயத்திற்கான தலைவரை நியமிப்பார். ஆரம்பத்தில் தீர்ப்பாயம் அல்லது நடுவர் மன்றம் ஒரே ஒரு உறுப்பினரைத் தான் கொண்டிருந்தன. பின்னர் நடுவர் மன்றங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்களை பெறுவதற்கு சட்டம் மாற்றப்பட்டது. நடுவர் மன்றத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி, உச்ச நீதிமன்ற அல்லது உயர் நீதிமன்றங்களின் நீதிபதிகள் அல்லது ஓய்வு பெற்ற நீதிபதிகளை நியமிப்பார். நடுவர் மன்றத்தின் தீர்ப்பு நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு சமமானதாகும். நடுவர் மன்றம் விசாரிக்கும் நதிநீர் பிரச்சனையில் வேறு எந்த நீதிமன்றமும் தலையிட முடியாது. மேலும் நதிநீர் ஆணையம் சட்டம் 1956 இன் கீழ் வரும் நதிகளில் மீது நடுவர் நீதிமன்றங்களை அமைக்க முடியாது.

சுருக்கமாக கூறவேண்டுமென்றால் நமது நாட்டில் மாநிலங்களுக்கிடையேயான நதிநீர் சிக்கல்கள் அணுகுமுறையில் இரண்டு தன்மைகள் காணப்படுகின்றன. பேச்சுவார்த்தைகள் மூலமாக இப்பிரச்சனைகளை தீர்க்க வேண்டும். பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்தால் நடுவர் நீதிமன்றம் அமைத்து தீர்வைக் காண வேண்டும்.

**செயல்பாடு: காவிரி நதி நீர் உரையாடல்**





**மாணவர்:** ஐயா, காவிரி நதி நீர்ப் பிரச்சனையை விவரிக்க முடியுமா?

**ஆசிரியர்:** காவிரி நதி நீர் சிக்கல் தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா, புதுச்சேரி ஆளுகைக்குட்பட்ட பகுதி ஆகிய நான்கு மாநிலங்களுக்கிடையேயான பிரச்சனையாகும்.

**மாணவர்:** இப்பிரச்சனையின் வரலாற்றுப் பின்னணி என்ன?

**ஆசிரியர்:** இப்பிரச்சனை நீண்ட வரலாற்றுப் பின்னணி உடையதாகும். மெட்ராஸ் மாகாணமும், மைசூர் அரசும் 1924 ஆம் ஆண்டு காவிரி நதி நீரை பயன்படுத்த ஒரு ஒப்பந்தம் கையெழுத்திட்டன. ஐம்பது ஆண்டுகள் கழித்து 1974 ஆம் ஆண்டு இவ்வொப்பந்தம் காலாவதியானது.

**மாணவர்:** ஐயா, சம்பந்தப்பட்ட மாநிலங்கள் 1974 ஆம் ஆண்டிற்குப் பின் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டனவா?

**ஆசிரியர்:** ஆம், சம்பந்தப்பட்ட மாநிலங்கள் பல சுற்றுப் பேச்சு வார்த்தைகளை நடத்தின. ஆனால், எந்த ஒரு தீர்வும் எட்டப்படவில்லை. நாம் ஏற்கனவே படித்தது போல நதி நீர் சிக்கல்கள் சட்டம் 1956 இன் படி காவிரி நதி நீர் நடுவர் மன்றம் 1991 ஆம் ஆண்டு மத்திய அரசால் அமைக்கப்பட்டது.

**மாணவர்:** நடுவர் மன்றம் தீர்ப்பை வழங்கிவிட்டதா? தீர்ப்பின் முக்கிய தன்மைகள் என்ன?



12th_Political Science_Tamil_Unit_5.indd 124 04-06-2019 11:50:41

**ஆசிரியர்:** நடுவர் மன்றம் தீர்ப்பை 2007–ஆம் ஆண்டு வழங்கிவிட்டது. மாதந்தோரும் கர்நாடகம் பிலிகுண்டுலு என்ற எல்லை பகுதியில் தமிழ்நாட்டிற்கு குறிப்பிட்ட அளவு நீரை வழங்க வேண்டும். காவிரி நதியில் இருந்து சம்பந்தப்பட்ட மாநிலங்களுக்கு தண்ணீரை குறிப்பிட்ட அளவில் நடுவர் மன்றம் பங்கீடு செய்தது. மழை இல்லா வருடங்களில், துன்பக் காலங்களில் எவ்வாறு நீர் பங்கீடு இருக்க வேண்டும் என்பதையும் நடுவர் மன்றம் தனது தீர்ப்பில் விவரித்துள்ளது.

**மாணவர்:** காவிரி மேலாண்மை வாரியம் என்றால் என்ன?

**ஆசிரியர்:** காவிரி நடுவர் மன்றம் தனது தீர்ப்பை அமல்படுத்துவதற்கு காவிரி மேலாண்மை வாரியத்தை உருவாக்க வேண்டும் என்று கூறியது.


**மாணவர்:** காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கப்பட்டுள்ளதா?

**ஆசிரியர்:** பல ஆண்டுகள் வழக்கு நடந்த பிறகு உச்ச நீதிமன்றம் தனது இறுதி தீர்ப்பை வெளியிட்டுள்ளது. காவிரி மேலாண்மை ஆணையமும் காவிரி நீர் ஒழுங்குபடுத்தும் குழுவும் உருவாக்கப்பட்டுள்ளது. உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் படி தமிழ்நாடு 177.25 டி.எம்.சி தண்ணீரை கர்நாடகத்திடமிருந்து எல்லைப் பகுதியில் பெறும். மொத்த காவிரி நீரில் தமிழ்நாடு 404.25 டி.எம்.சி, கர்நாடகம் 284.25 டி.எம்.சி, கேரளா 30 டி.எம்.சி, புதுச்சேரி 7 டி.எம்.சி என்று உச்ச நீதிமன்றம் நீர்ப் பங்கீடு செய்துள்ளது.

## 5.5 இந்தியக் கூட்டாட்சியில் பிரச்சனைகளும் தேவைகளும்

கூட்டாட்சி முறையில் காணப்படும் பல்வேறு சிக்கல்கள் மத்திய–மாநில உறவுகளை பாதிக்கின்றன.

### ஆளுநரின் நியமனம் மற்றும் பணி



அறிஞர் அண்ணா, மாநில உரிமைகளின் பாதுகாலர்

மத்திய அரசாங்கத்தின் முகவராக ஆளுநர் மாநிலத்தில் செயல்படுவதை மாநில அரசாங்கங்கள் எதிர்க்கின்றன. ராஜமன்னார் குழு மாநில ஆளுநர்கள் கூட்டாட்சி முறைக்கு எதிராக இருப்பதாக விமர்சித்தது. தமிழகத்தின் முன்னாள் முதல்வர் அண்ணாதுரை அவர்கள் காலத்தில் இருந்து ஆளுநர்களின் அதிகாரங்களை குறைக்க வேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டு வந்தது.

மாநில கட்சிகள் அரசியலில் தீவிரமாக இயங்கும் தலைவர்களை மாநில ஆளுநராக நியமிக்க கூடாது என கூறுகின்றன. ஆளுநர்களின் நியமனத்தில் மாநில அரசாங்கங்களையும் கலந்தாலோசிக்கப்பட வேண்டும் என்று மாநில கட்சிகள் வலியுறுத்துகின்றன. இந்தியாவின் முன்னேற்றத்திற்கு பாடுபட்ட, மிகச்சிறந்த அறிஞர்களை, சேவையாளர்களை, ஆளுநர்களாக நியமிக்க வேண்டுமென கோரப்படுகிறது.

எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் ஆளுநர்களின் செயல்பாடுகள் அதிருப்தியை உருவாக்கியுள்ளன. மாநிலங்களில் ஆளும் கட்சி உடைந்து போனாலோ, அல்லது தொங்கு சட்டமன்றம் உருவானாலோ ஆளுநர்களின் முடிவுகள் சர்ச்சைகளை உருவாக்குகின்றன.

**செயல்பாடு**

மாநில அரசியலில் ஆளுநர்களின் பங்கை பற்றி ஒரு திட்ட அறிக்கைத் தயார் செய்யவும்.



12th_Political Science_Tamil_Unit_5.indd 125 04-06-2019 11:50:41

### கல்வி

ஆரம்ப காலத்தில் கல்வி இரண்டாவது பட்டியலான மாநிலப் பட்டியலில் தான் இடம்பெற்றிருந்தது. 1976ஆம் ஆண்டு நாடாளுமன்றம் 42 வது அரசியல் சாசன திருத்தச்சட்டத்தின் மூலம் கல்வியை மூன்றாவது பட்டியலான பொதுப் பட்டியலுக்கு மாற்றியது. மாநில அரசுகளின் தனிப்பட்ட அதிகாரம் மத்திய மாநில அரசாங்கங்களுக்கு பொதுவானதாக மாற்றப்பட்டது. பொதுப் பட்டியலில் தற்போது கல்வி இருப்பதால் மத்திய மாநில அரசாங்கங்களுக்கு இடையே முரண்பாடுகள் தோன்றினால் மத்திய அரசின் அதிகாரமே செல்லுபடி ஆகும். ஆகவே தமிழ்நாடு உள்ளிட்ட பல மாநிலங்கள் கல்வியை மீண்டும் மாநிலப் பட்டியலுக்கு மாற்ற வேண்டும் என கூறுகின்றன.

**மாநில சுயாட்சி பிரச்சனைகள்**

- **கல்வி இடமாற்றம்**
- **ஆளுநர் நியமனம்**
- **உறுப்பு 356**
- **சட்ட முன்வரைவுகள் தேக்கிவைப்பு**
- **அனைத்து இந்தியப் பணிகள்**

### மாநில சட்ட முன்வரைவுகளை குடியரசுத்தலைவரின் கவனத்திற்கு தேக்கி வைத்தல்.

மாநிலங்கள் நிறைவேற்றும் சட்ட முன்வரைவுகளை ஆளுநர்கள் குடியரசுத்தலைவரின் கவனத்திற்கு கொண்டு செல்லலாம். மாநிலத்தின் நிதி சட்ட முன்வரைவுகளை ஆளுநர்கள் தேக்கி வைத்தால் குடியரசுத்தலைவர் அவைகளை நிராகரிக்கலாம் அல்லது அவைகளுக்கு தனது இசைவைத் தெரிவித்தது அவைகளை சட்டமாக்கலாம். மாநிலத்தின் சாதாரண சட்ட முன்வரைவுகள் ஆளுநர்களால் தேக்கி வைக்கப்பட்டால் குடியரசுத்தலைவர் அந்த முன்வரைவுகளை திரும்பவும் விவாதிக்குமாறு மாநில சட்டமன்றத்திற்கே அனுப்பி வைக்கலாம்.

மறுபரிசீலனை செய்து மீண்டும் அந்த முன்வரைவுகளை மாநில சட்டமன்றம் அனுப்பினாலும் குடியரசுத்தலைவர் முன்வரைவை நிராகரிக்கலாம். நமது நாட்டின் ஒற்றுமையை காப்பதற்காக அரசமைப்பு இவ் வழிமுறைகளை உருவாக்கியுள்ளது.

ஆனால் பல மாநில அரசாங்கங்கள் இவ்வழிமுறை மீது அதிருப்தி தெரிவித்துள்ளன. அரசியல் காரணத்திற்காக ஆளுநர்கள் இப்பிரிவை தவறாக பயன்படுத்துவதாக குற்றம் சுமத்துகின்றன. எதிர்க்கட்சிகள் ஆளும் மாநில அரசாங்கங்களுக்கு எதிராக ஆளுநர்கள் இவ்விவகாரத்தை பயன்படுத்துவதாகக் கூறுகின்றனர்.

**செயல்பாடு**

மாநில உரிமை கோரிக்கைகள் பற்றி வகுப்பில் விவாதம் நடத்தவும்.

### உறுப்பு 356 தவறாக பயன்படுத்தப் பட்டால்

அரசமைப்பின் 18-வது பகுதியில் 356 உறுப்பு ஒரு மாநிலத்தில் அரசமைப்பு ஆட்சி முறை சீர்குலைந்து விட்டால் குடியரசுத்தலைவர் அவசர காலத்தை அமல் படுத்தலாம் என்று கூறுகின்றது. ஆளுநரின் அறிக்கையின் அடிப்படையிலோ அல்லது ஆளுநரின் அறிக்கை இல்லாமலோ குடியரசுத்தலைவர் உறுப்பு 356-ஐ அமல்படுத்தலாம். நமது நாட்டின் ஒற்றுமையை பாதுகாப்பதற்காக இப்பிரிவை அரசமைப்பு உருவாக்கியுள்ளது.

எதிர்க்கட்சிகள் ஆளும் பல்வேறு மாநிலங்கள் உறுப்பு 356 மத்திய அரசாங்கத்தினால் தவறாக பயன்படுத்தப்படுகிறது என்று விமர்சித்துள்ளனர்.

மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கங்களுக்கு எதிராக இவ்வுறுப்பை தவறாக பயன்படுத்தியுள்ளதாக பல

மாநிலங்கள் தெரிவித்துள்ளன. கட்சி அரசியல் காரணங்களுக்காக இவ்வுறுப்பு தவறாக பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே பல மாநில கட்சிகள் அரசமைப்பின் உறுப்பு 356-ஐ அகற்ற வேண்டும் என கோருகின்றன.

### அனைத்து இந்தியப் பணிகள்

அரசமைப்பின் உறுப்பு 312 வழியாக அனைத்து இந்தியப் பணிகள் உருவாக்கப்படுகின்றன. இப்பணிகளின் அதிகாரிகள் மத்திய அரசாங்கத்தினால் தேர்வு செய்யப்படுகின்றனர். மாநிலங்களுக்கு மத்திய அரசினால் இவ்வதிகாரிகள் அனுப்பி வைக்கப்படுகின்றனர். மாநில அரசாங்கங்கள் அனைத்து இந்தியப் பணி அதிகாரிகளை இடமாற்றம் செய்யலாம். ஆனால் மத்திய அரசாங்கம் மட்டுமே அனைத்து இந்தியப் பணி அதிகாரிகளை பதவியில் இருந்து நீக்க முடியும். ஆகவே இவ்வதிகாரிகள் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ளனர். மாநில அரசாங்கங்களின் மீது மத்திய அரசு இவ்வதிகாரிகள் மூலம் ஆதிக்கம் செலுத்துவதாக குற்றம் சாட்டப்படுகிறது. தமிழ்நாடு அரசாங்கம் அமைத்த இராஜமன்னார் குழு அனைத்து இந்தியப் பணிகளை அகற்ற வேண்டும் என பரிந்துரைத்தது.

மத்திய மாநில உறவுகளை பற்றி இது வரையில் பல்வேறு குழுக்கள் பரிந்துரைகளை வழங்கியுள்ளன.

### 5.5.1 நிர்வாகச் சீர்திருத்தங்கள் குழு

நமது நாட்டின் நிர்வாகச் சீர்திருத்தங்களுக்காக இதுவரையில் இரண்டு நிர்வாகச் சீர்திருத்தங்கள் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. முதல் நிர்வாகச் சீர்திருத்தக் குழு 1966-ஆம் ஆண்டு ஆரம்பத்தில் மொரார்ஜி தேசாய் தலைமையிலும் பின்னர் கே.அனுமந்தையா தலைமையிலும் உருவாக்கப்பட்டது. இக்குழு 20 அறிக்கைகளை வழங்கியது. அவைகளில் ஒரு அறிக்கை மத்திய மாநில உறவுகளை பற்றி பரிந்துரைகளை வழங்கியது.

இரண்டாவது நிர்வாகச் சீர்திருத்தங்கள் குழு 2005ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. ஆரம்பத்தில் வீரப்ப மௌலியும் பின்னர் வி. இராமச்சந்திரனும் தலைவர்களாக இருந்தனர்.

**மத்திய மாநில உறவுகள் குழுக்கள்**

1. நிர்வாகச் சீர்திருத்தங்கள் குழு
2. இராஜாமன்னார் குழு
3. சர்க்காரிய குழு
4. புன்ச்சி குழு
5. வெங்கட செல்லையா குழு

### 5.5.2 இராஜமன்னார் குழு


இராஜமன்னார்

தமிழ்நாடு அரசாங்கம் நமது அரசமைப்பின் மத்திய மாநில உறவுகளை ஆய்வு செய்து பரிந்துரைகள் வழங்குவதற்கு இராஜமன்னார் குழுவை அமைத்தது. சென்னை உயர் நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி பி.வி இராஜமன்னார், சென்னை பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் முனைவர் ஏ. இலட்சுமண சுவாமி, ஆந்திர உயர் நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி முனைவர் பி சந்திர ரெட்டி ஆகியோர் இக்குழுவில் இருந்தனர். தங்களது பரிந்துரைகளை இக்குழு அரசாங்கத்திற்கு 1971 ஆம் ஆண்டு வழங்கியது. மாநில சுயாட்சி வரலாற்றில் மிகவும் முக்கிய மைல்கல்லாக இக்குழுவின் அறிக்கை உள்ளது.

**இக்குழுவின் முக்கிய பரிந்துரைகள் கீழ்க்கண்டவைகள் ஆகும்.**

1. அரசமைப்பின் 263 உறுப்பு உடனடியாக அமல் படுத்தப்பட



12th_Political Science_Tamil_Unit_5.indd 127 04-06-2019 11:50:42

வேண்டும். மாநிலங்களுக்கிடையேயான குழு உருவாக்கப்பட வேண்டும். இக்குழுவின் தலைவராக பிரதமர் பணிபுரிய வேண்டும். மாநில முதல்வர்கள் அல்லது அவர்களால் நியமிக்கப்பட்டவர்கள் உறுப்பினர்களாக பணியாற்ற வேண்டும். மாநிலங்களுக்கிடையேயான குழுவிடம் அதிக அதிகாரங்கள் இருக்கவேண்டும். மத்திய அரசாங்கத்தின் முக்கிய முடிவுகளையும், நாடாளுமன்றத்தின் சட்டங்களையும் இக்குழுவில் ஆலோசிக்க வேண்டும். தேசத்தின் பாதுகாப்பு, வெளியுறவு ஆகிய இரண்டு அதிகாரங்கள் தவிர, இதர எல்லா அதிகாரங்களையும், பயன்படுத்தும் முன் மத்திய அரசு மாநிலங்களுக்கிடையேயான குழுவை ஆலோசிக்க வேண்டும்.

2. தற்பொழுது உள்ள மத்திய மாநில உறவுகள் மத்திய அரசுக்கு சாதகமாக உள்ளது. ஆகவே அரசமைப்பின் உறுப்புகள் 256, 257, 339(2) ஆகியவைகளை நீக்க வேண்டும். இந்த உறுப்புகள் மாநில உரிமைகளை பாதிப்பதால் அவைகளை நீக்கி மாநில உரிமைகளை வலுப்படுத்த வேண்டும் என இராஜமன்னார் குழு பரிந்துரைத்தது.

3. மூன்று பட்டியல்களில் இல்லாத இதர அதிகாரங்கள் மத்திய அரசிடமிருந்து மாநில அரசுகளுக்கு மாற்றப்பட வேண்டும். வரி விதிக்கும் அதிகாரமும் மாநில அரசுகளுக்கு மாற்றப்பட வேண்டும்.

4. அரசமைப்பின் XVIII பகுதியில் உள்ள உறுப்பு 356 மத்திய அரசால் கவனமாக பயன்படுத்தப்பட வேண்டும். மாநிலத்தில் அரசியல் சாசன அமைப்பு முற்றிலும் சீர்குலைந்தால் மட்டுமே, கடைசி ஆயுதமாக மத்திய அரசு இவ்வுறுப்பை பயன்படுத்த வேண்டும். சாதாரண சட்ட ஒழுங்கு பிரச்சனைகளுக்கு இவ்வுறுப்பை மாநிலங்களில் மத்திய அரசு பயன்படுத்தக்கூடாது.

5. இராஜாமன்னார் குழு அனைத்து இந்தியப் பணிகளில் பெரிய அளவில் மாற்றங்களை பரிந்துரைத்தது. நமது நாட்டில் இரண்டு வகையான பணிகள் மட்டுமே இருக்க வேண்டும். மத்தியப் பணிகள் மத்திய அரசிற்கும் மாநிலப் பணிகள் மாநில அரசிற்கும் நிர்வாகத் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும். இரண்டிற்கும் பொதுவான, மத்திய அரசுக்கு சாதகமான, மாநில அரசுகளுக்கு எதிரான அனைத்து இந்தியப் பணிகள் தேவையில்லை. கூட்டாட்சி முறைக்கு எதிராக இருப்பதால் இந்திய ஆட்சிப் பணி ( ஐ.ஏ.எஸ்) உள்ளிட்ட அனைத்து இந்தியப் பணிகளை அரசமைப்பிலிருந்து நீக்குவதற்கு இராஜமன்னார் குழு பரிந்துரைத்தது.

6. நிதி ஆதாரங்களை மத்திய அரசாங்கத்திடம் இருந்து மாநில அரசாங்கத்திற்கு அதிக அளவில் மாற்றித்தரவேண்டும் என இக்குழு கூறியது. மாநிலங்களின் நிதி சக்தியை அதிகரிப்பதற்கு தொழில் நிறுவனங்கள் வரி, ஏற்றுமதி வரி, சுங்க வரி போன்றவற்றை மத்திய அரசாங்கத்திடம் இருந்து மாநிலங்களுக்கு மாற்ற வேண்டும். நிதி ஆற்றல் தான் மாநில உரிமைகளின் அச்சாணி என்று இக்குழு கருதியது. ஆகவே அரசமைப்பின் ஏழாவது அட்டவணையில் திருத்தங்கள் பெரிய அளவில் செய்ய வேண்டும். மத்தியப் பட்டியல், பொதுப் பட்டியல் ஆகியவற்றிலிருந்து மாநிலப் பட்டியலுக்கு அதிக அதிகாரங்களை மாற்ற வேண்டும். தேசிய ஒற்றுமை, வளர்ச்சி, மாநில உரிமைகள் மற்றும் அடையாளங்கள் ஆகியவற்றை கவனத்தில் கொண்டு நிதிக் குழு ஒரு நிரந்தர, பாகுபாடு இல்லாத அமைப்பாக மாற வேண்டும் என இராஜமன்னார் குழு பரிந்துரைத்தது.

### 5.5.3 சர்க்காரியா குழு


முனைவர் ஆர்.எஸ். சர்க்காரியா

மத்திய அரசாங்கம் பல கூட்டாட்சி கோரிக்கைகள் மாநிலங்களால் எழுப்பப்பட்டதால் 1983 ஆம் ஆண்டு நீதியரசர் ஆர்.எஸ். சர்க்காரியா தலைமையில் ஒரு குழுவை



12th_Political Science_Tamil_Unit_5.indd 128 04-06-2019 11:50:42

உருவாக்கியது. இக்குழுவில் பி. சிவராமன், முனைவர் ஆர்.எஸ்.எஸ்.சென் ஆகிய நிபுணர்களும் உறுப்பினர்களாக இருந்தனர். இக்குழு 247 பரிந்துரைகளை உள்ளடக்கிய ஒரு விரிவான அறிக்கையை ஐந்து வருடங்கள் கழித்து மத்திய அரசிற்கு சமர்ப்பித்தது.

1. **மாநிலங்களுக்கிடையேயான குழு:** மாநிலங்களுக்கிடையேயான குழு உருவாக்கப்பட வேண்டும். அரசமைப்பின் உறுப்பு 263(பி) மற்றும் (சி) பணிகளை செய்யும் அதிகாரம் இக்குழுவிடம் வழங்கப்பட வேண்டும். மாநிலங்களின் பொதுவான நலன் கருதி மாநிலங்களுக்கிடையேயான குழு பரிந்துரைகளை வழங்க வேண்டும். ஆனால் அரசமைப்பின் உறுப்பு 263 (அ)-யின் அதிகாரம் இக்குழுவிற்கு வழங்கப்படக்கூடாது. அதாவது மாநிலங்கள் இடையில் எழும் சிக்கல்களில் தலையிடும் அதிகாரம் மாநிலங்களுக்கிடையேயான குழுவிற்கு வழங்கக் கூடாது. மேலும் ஒரு நிரந்தர, சுயாட்சி பெற்ற செயலகத்தை மாநிலங்களுக்கிடையேயான குழுவிற்கு உருவாக்கித் தர வேண்டும்.

2. **அரசமைப்பின் உறுப்பு 356** மிகவும் கவனமாக, மிகவும் குறைவாகவே பயன்படுத்தப்பட வேண்டும். கடைசி ஆயுதமாக இவ்வுறுப்பு பயன்படுத்தப்பட வேண்டும். ஒரு மாநிலத்தில் அரசமைப்பு ஆட்சி முறை முற்றிலும் சீர்குலைந்தால் மட்டுமே இவ்வுறுப்பை பயன்படுத்த வேண்டும். உறுப்பு 356 அமல்படுத்துவதற்கு முன் எல்லா மாற்று உத்திகளையும் பயன்படுத்த வேண்டும்.

3. **ஆளுநர்:** ஆளுநர் பதவியை ரத்து செய்ய வேண்டும். ஆளுநரை நியமிக்கும் முன் சம்பந்தப்பட்ட மாநில அரசை கலந்தாலோசிக்க வேண்டும் என்ற சில அரசியல் கட்சிகளின் கருத்துக்களை சர்க்காரியா குழு நிராகரித்தது. கூட்டாட்சி முறை நன்கு செயல்படுவதற்கு அரசியல் தலைவர்களை ஆளுநர்களாக நியமிக்கக் கூடாது என்று இக்குழு பரிந்துரைத்தது. இந்தியாவின் முன்னேற்றத்துக்கு பாடுபட்ட பெருமை மிக்க இந்தியக் குடிமகன்களை ஆளுநர்களாக நியமிக்க வேண்டும். வெவ்வேறு கட்சிகள் மத்தியிலும் மாநிலத்திலும் ஆட்சியில் இருக்கும் பொழுது, மத்தியில் ஆளும் கட்சியின் தலைவர்களை மாநிலத்தின் ஆளுநராக நியமிக்கக்கூடாது.

4. **மொழி:** மும்மொழிக்கொள்கையை கண்டிப்பாக அமல்படுத்த வேண்டும் என்று சர்க்காரிய குழு பரிந்துரைத்தது. மும்மொழிக் கொள்கை தேசிய ஒற்றுமையை வளர்க்கும் என்று இக்குழு கூறியது.

### 5.5.4 புன்ச்சி குழு



**நீதியரசர் மதன் மோகன் புன்ச்சி**

புதிய அரசாங்கம் 2007ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தின் முன்னால் தலைமை நீதிபதி மதன் மோகன் புன்ச்சி தலைமையில் ஒரு புதிய குழுவை அமைத்தது. இக்குழுவில் மூன்று நிபுணர்களும் ஒரு செயலரும் இருந்தார். இக்குழு 2010 ஆம் ஆண்டு தனது பரிந்துரைகளை மத்திய அரசுக்கு வழங்கியது.

மாநில ஆளுநர்கள் குறிப்பிட்ட பதவிக்காலத்திற்கு நியமிக்கப்படவேண்டும். குடியரசுத்தலைவரை பதவி நீக்கம் செய்யும் முறை போல மாநில ஆளுநர்களும் நாடாளுமன்றத்தின் பதவி நீக்க தீர்மானம் மூலம் மட்டுமே பதவியில் இருந்து நீக்கப்பட வேண்டும். ஒரு மாநிலத்தில் கிளர்ச்சியில்

பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் அல்லது பகுதிகளில் மட்டுமே குடியரசுத்தலைவர் ஆட்சியை அமல்படுத்தலாம். மாநிலம் முழுவதும் குடியரசுத்தலைவர் ஆட்சியை அமல்படுத்த வேண்டிய அவசியமில்லை. இதற்காக அரசமைப்பின் உறுப்புகள் 355, 356 ஆகியவற்றில் மாற்றம் செய்ய வேண்டும். மதக் கலவரங்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மாநில அரசாங்கத்தின் ஒப்புதல் பெறாமலே மத்திய அரசு தனது காவல் படைகளை அனுப்பி அமைதியை நிலைநாட்டலாம்.

**செயல்பாடு**

"முன்னேற்றத்திற்காக பெரிய மாநிலங்களை உடைத்து சிறிய மாநிலங்களை உருவாக்க வேண்டும்" என்ற தலைப்பில் வகுப்பில் குழு விவாதத்தை நடத்த வேண்டும்.

## எஸ்.ஆர். பொம்மை வழக்கு உச்ச நீதிமன்ற தீர்ப்பு



சோமப்ப ராயப்ப பொம்மை (6 ஜூன் 1924 முதல் 10 அக்டோபர் 2007 வரை) கர்நாடக மாநிலத்தின் பதினோராவது முதல்வராக பணியாற்றினார். ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் 1996 முதல் 1998 வரை மனிதவள முன்னேற்ற அமைச்சராகவும் இருந்தார். எச்.டி.தேவகவுடா, ஐ.கே.குஜரால் ஆகிய இரண்டு பிரதமர்களின் அமைச்சரவையில் அவர் பணியாற்றியுள்ளார்.

எஸ் .ஆர் .பொம்மை அவர்கள் முதல்வராக இருந்த கர்நாடக அரசாங்கம் மத்திய அரசால் பதவி நீக்கம் செய்யப்பட்டது. இதனை எதிர்த்து முதல்வர் எஸ்ஆர் பொம்மை உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். உச்ச நீதிமன்றம் இவ்வழக்கில் 1994 ஆம் ஆண்டு புகழ்பெற்ற பொம்மை வழக்குத் தீர்ப்பை வழங்கியது. மத்திய மாநில உறவுகளில், மாநில உரிமைகளை காப்பதில் பொம்மை வழக்குத் தீர்ப்பு மிக முக்கிய திருப்புமுனையாக கருதப்படுகிறது.

மத்திய அரசாங்கம் தன்னிச்சையான முறையில், அரசமைப்பிற்கு எதிராக மாநில அரசாங்கங்களை பதவி நீக்கம் செய்யக்கூடாது என்பது இத்தீர்ப்பின் மையக் கருத்தாகும். அரசியலமைப்பின் 356 -வது உறுப்பை கவனத்துடன், கடைசி ஆயுதமாக மத்திய அரசாங்கம் பயன்படுத்த வேண்டும். அரசியல் சாசன ஆட்சி சீரழிந்தால் மட்டுமே இவ்வுறுப்பை மத்திய அரசு பயன்படுத்த வேண்டும். எடுத்துக்காட்டாக சட்டப்பேரவை தேர்தலுக்கு பின் எந்த ஒரு கட்சிக்கும் கூட்டணிக்கும் பெரும்பான்மை ஆதரவு கிடைக்கவில்லை. மத்திய அரசாங்கத்தின் கட்டளைகளை மாநில அரசாங்கம் மதிக்கவில்லை போன்ற காரணங்களுக்கு மாநில அரசாங்கத்தை மத்திய அரசு பதவி நீக்கம் செய்யலாம்.

சாதாரண காரணங்களுக்காக மத்திய அரசு 356-வது உறுப்பை பயன்படுத்தக்கூடாது. எடுத்துக்காட்டாக மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு சரியில்லை. நாடாளுமன்றத் தேர்தலில் மாநிலத்தில் ஆளும் கட்சி தோற்றுவிட்டது.

மாநிலத்தில் அரசியல் சாசன ஆட்சிமுறை சீரழிந்து விட்டது என்ற ஆளுநரின் அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மாநிலத்தில் நிலவும் அசாதாரணமான சூழ்நிலையை ஆளுநரின் அறிக்கை தெளிவாக விவரிக்க வேண்டும். மாநிலத்தின் சட்டப்பேரவை கலைக்கப்படுவதற்கு முன் குடியரசுத்தலைவர் ஆட்சிக்கு நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் ஒப்புதல் வழங்கப்பட்டு இருக்க வேண்டும்.



12th_Political Science_Tamil_Unit_5.indd 130 04-06-2019 11:50:43

நீதிமன்றம் உறுப்பு 356 கீழ் மாநில அரசை மத்திய அரசாங்கம் பதவி நீக்கம் செய்தது சரியா, தவறா என ஆராயும் அதிகாரத்தை பெற்று இருக்கின்றது. உறுப்பு 356 தவறாக மத்திய அரசால் பயன்படுத்தப்பட்டால் உச்ச நீதிமன்றம் நீதி சீராய்வு அதிகாரத்தை பயன்படுத்தும். பதவி நீக்கம் அரசமைப்பிற்கு எதிராக இருந்தால் உச்ச நீதிமன்றம் பதவி நீக்கப்பட்ட மாநில அரசாங்கத்தை மீண்டும் பதவியில் அமர்த்தும்.

பொம்மை வழக்கு உச்ச நீதிமன்றத் தீர்ப்பு வந்த பிறகு மத்திய அரசின் தன்னிச்சையான பதவி நீக்க நடவடிக்கையில் இருந்து மாநில அரசாங்கங்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன.

அண்ணல் அம்பேத்கர் அரசமைப்பின் உறுப்பு 356-யை (தேவையற்ற வார்த்தை) என்று வர்ணித்தார். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கங்களுக்கு எதிராக இவ்வுறுப்பு உள்ளதை அவர் கசப்புடன் ஏற்றுக்கொண்டார்.

### 5.5.5 வெங்கடசெல்லையா குழு



எம்.என். ராவ் வெங்கடசெல்லையா

பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய் தலைமையிலான தேசிய மக்களாட்சிக் கூட்டணி அரசாங்கம் 2000-ஆம் ஆண்டு நீதியரசர் நாராயணராவ் வெங்கடசெல்லையா தலைமையில் ஒரு குழுவை அமைத்தது. இந்த அரசமைப்பு மதிப்பாய்வு தேசிய குழு (NCRWC) அரசமைப்பில் பல சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டும் எனக் கூறியது.

## அருஞ்சொற்பொருள்

- **கூட்டாட்சி:** அரசமைப்பு வழியாக மத்திய மாநில அரசாங்கங்கள் இடையே அதிகாரப் பகிர்வை வழங்கி இருக்கும் அரசியல் முறைக்கு கூட்டாட்சி என்று பெயராகும்.
- **நெகிழா அரசமைப்பு:** அரசியல் சாசனத்தில் திருத்தங்கள் ஏற்படுத்துவதற்கு சிறப்பு அரசியல் சாசன திருத்த முறை அல்லது அறுதிப் பெரும்பான்மை ஆதரவு முறையுள்ள அமைப்பிற்கு நெகிழா அரசமைப்பு என்பது பெயராகும். அரசமைப்பை எளிதில், சாதாரண சட்டங்கள் மூலம் மாற்ற முடியாது.
- **நெகிழும் அரசமைப்பு:** சாதாரண சட்டங்கள் மூலமாக ஒரு அரசமைப்பை திருத்த முடியும் என்றால் அதற்கு நெகிழும் அரசமைப்பு என்பது பெயராகும்.
- **அதிகாரப் பகிர்வு:** கூட்டாட்சி முறையின் முக்கியமான தன்மை அதிகாரப் பகிர்வு ஆகும். அதிகாரங்கள் மத்திய மாநில அரசாங்கங்களுக்கிடையே அரசமைப்பின் வழியாக பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.
- **ஒற்றைக் குடியுரிமை:** ஒரு நாட்டில் தேசியக் குடியுரிமை மட்டுமே காணப்படுதல். பொதுவாக ஒற்றையாட்சி நாடுகளில் ஒற்றைக் குடியுரிமை காணப்படும். மாநிலங்கள் குடியுரிமையை மக்களுக்கு வழங்காது.
- **ஈரவை நாடாளுமன்றம்:** இங்கு நாடாளுமன்றத்திற்கு இரண்டு அவைகள் உள்ளன. கூட்டாட்சி முறையின் தன்மை ஈரவை நாடாளுமன்றமாகும். மேலவை மாநிலங்களின் அவையாகவும் கீழவை மக்கள் அவையாகவும் இருக்கும்.
- **கூட்டுறவுக் கூட்டாட்சி:** கிரான்வில் ஆஸ்டின் என்ற புகழ்பெற்ற அரசமைப்பு அறிஞர் இந்தியக் கூட்டாட்சியை கூட்டுறவுக் கூட்டாட்சி என வர்ணித்தார். மத்திய மாநில அரசாங்கங்கள் இடையே கூட்டுறவு காணப்படுகின்றது.
- **ஒன்றியப் பட்டியல்:** அரசமைப்பின் ஏழாவது அட்டவணையில் உள்ள முதலாவது பட்டியல் ஒன்றிய (யூனியன்) பட்டியல் என்று அழைக்கப்படுகிறது.

மத்திய அரசாங்க அதிகாரங்கள் இப்பட்டியலில் உள்ளன.

- **மாநிலப் பட்டியல்:** இரண்டாவது பட்டியிலில் அரசமைப்பின் ஏழாவது அட்டவணையில் மாநில அரசுக்கு மட்டும் பொருந்தகூடிய துறைகளை கொண்டுள்ளது.
- **பொதுப் பட்டியல்:** அரசமைப்பின் ஏழாவது அட்டவணையில் உள்ள மூன்றாவது பட்டியல் பொதுப் பட்டியல் ஆகும். மத்திய, மாநில அரசாங்கங்களுக்கு பொதுவாக உள்ள அதிகாரங்கள் இப்பட்டியலில் இடம் பெற்றுள்ளன. மத்திய, மாநில அரசுகள் இடையே பொதுப்பட்டியலில் உள்ள அதிகாரத்தில் முரண்பாடுகள் ஏற்பட்டால் மத்திய அரசாங்கத்தின் அதிகாரமே செல்லும்.
- **இதரப் பட்டியல்:** அரசமைப்பின் ஏழாவது அட்டவணையில் உள்ள மூன்று பட்டியல்களில் இடம் பெறாத அதிகாரம் இதர அதிகாரமாகக் கருதப்படும். இதர அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்திற்கே சொந்தமாகும்.
- **அனைத்து இந்தியப் பணிகள்:** அனைத்து இந்தியப் பணிகள் அரசமைப்பின் உறுப்பு 312 பிரகாரம் தோற்றுவிக்கப்படுகின்றன. மாநிலங்களவை அறுதிப் பெரும்பாண்மை ஆதரவுடன் புதிய அனைத்து இந்தியப் பணிகளை உருவாக்கலாம். மாநிலங்களவையின் தற்போதைய உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை அல்லது மாநிலங்களவையின் மொத்த உறுப்பினர்களில் அறுதிப்பெரும்பான்மை ஆதரவுடன் தீர்மானம் இயற்றி அனைத்து இந்தியப் பணிகளை உருவாக்கலாம்.
- **ஆனந்த்பூர் சாஹிப் தீர்மானம்:** பஞ்சாப் மாநிலத்தின் மாநில கட்சியான அகாலிதளம் ஆனந்த்பூர் சாஹிப் என்ற இடத்தில் மாநில சுயாட்சி தீர்மானத்தை உருவாக்கியது. மாநிலங்கள் பெரும்பான்மையான அதிகாரங்களைப் பெற்றிருக்கும். மத்திய அரசு பாதுகாப்பு, வெளியுறவு போன்ற ஒரு சில அதிகாரங்களை மட்டுமே பெற்றிருக்கும்.
- **இராஜமன்னார் குழு:** தமிழ்நாடு அரசு 1968-ஆம் ஆண்டு மத்திய மாநில உறவுகளை ஆய்வு செய்து பரிந்துரை வழங்கியதற்காக இராஜா மன்னார் குழுவை அமைத்தது. மாநில உரிமைகள் வரலாற்றில் இராஜ மன்னார் அறிக்கை மிக முக்கியமானதாக உள்ளது.
- **சர்க்காரிய குழு:** மத்திய அரசாங்கம் 1983-ஆம் ஆண்டு மத்திய மாநில உறவுகளை ஆய்வதற்காக சர்க்காரிய குழுவை அமைத்தது.
- **அரசமைப்பு மதிப்பாய்வு தேசிய குழு (National Commission to Review the Working of the Constitution[NCRWC]):** மத்திய அரசாங்கத்தால் 2000-ஆம் ஆண்டு அரசமைப்பு மதிப்பாய்வு தேசிய குழு அமைக்கப்பட்டது.இதுவெங்கடசெல்லையா குழு என்றும் அழைக்கப்படுகிறது.
- **ஒற்றையாட்சி அரசமைப்புகள்:** இவ்வகையான அரசமைப்புகளில் மத்திய அல்லது தேசிய அரசாங்கம் மட்டுமே அரசமைப்பால் உருவாக்கப்படுகிறது. மாநில அரசாங்கங்களை அரசமைப்பு உருவாக்கவில்லை அல்லது அங்கீகரிக்கவில்லை.
- **நீதி சீராய்வு:** அரசாங்கத்தின் முடிவுகளையும் நாடாளுமன்றத்தின் சட்டங்களையும் அரசமைப்பிற்கு உட்பட்டு உள்ளனவா என ஆராயும் உச்ச நீதிமன்ற அதிகாரத்திற்கு நீதி சீராய்வு அதிகாரம் என்று பெயராகும். நமது அரசமைப்பு உச்ச நீதிமன்றத்திற்கு இவ்வதிகாரத்தை சில கட்டுபாடுகளுடன் வழங்குகிறது.
- **நடுவர்மன்றம்:** மாநிலங்களுக்கிடையேயான நதி நீர்ப் பிரச்சனைகளை தீர்ப்பதற்கு உருவாக்கப்படும் அமைப்பிற்கு நடுவர் மன்றம் அல்லது தீர்ப்பாயம் என்பது பெயராகும்.
- **சூய் ஜென்ரிஸ் (Sui Generis):** வித்தியாசமானது, தனித்துவமானது என்பது இதன் பொருளாகும். ரஷ்ய நாட்டின் அரசமைப்பு அறிஞர் அலெக்சாண்ரவிக்ஸ் இந்திய அரசமைப்பின் கூட்டாட்சி முறையை இவ்வாறு வர்ணித்தார்.



12th_Political Science_Tamil_Unit_5.indd 132 04-06-2019 11:50:43

## மதிப்பிடுதல்

### I. சரியான பதிலைத் தேர்வு செய்யவும்

GFW9I6

1. உலகின் முதல் கூட்டாட்சி அமைப்பு எந்த நாட்டை சேர்ந்தது?

   அ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்
   ஆ) ஐக்கிய பேரரசு (United Kingdom)
   இ) இந்தியா
   ஈ) ஆஸ்திரேலியா

2. இந்தியாவில் கூட்டாட்சி முறையை முதன்முதலாக கோரியது எது?

   அ) மவுண்ட்பேட்டன் திட்டம்
   ஆ) நேரு அறிக்கை
   இ) அமைச்சரவைக் குழு
   ஈ) இராஜாஜி திட்டம்

3. ஆங்கிலேய அரசாங்கம் கூட்டாட்சி முறையை அதிகாரப் பூர்வமாக முதன்முதலில் எப்பொழுது வழங்க முன்வந்தது?

   அ) மின்டோ மார்லி சீர்த்திருத்தங்கள்
   ஆ) மாண்ட் ஃபோர்ட் சீர்த்திருத்தங்கள்
   இ) இந்திய அரசாங்கச் சட்டம் 1935
   ஈ) அமைச்சரவைக் குழு

4. ஈரவை நாடாளுமன்றம் என்பதில் எத்தனை அவைகள் உள்ளன?

   அ) மூன்று அவைகள்
   ஆ) ஒரு அவை
   இ) நான்கு அவைகள்
   ஈ) இரண்டு அவைகள்

5. கூட்டாட்சி அரசமைப்பின் மிக முக்கிய தன்மை எது?

   அ) மாநில அரசாங்கங்கள்
   ஆ) தேசிய அரசாங்கம்
   இ) அதிகாரப் பகிர்வு
   ஈ) அரசியல் கட்சிகள்

6. மத்திய-மாநில அரசாங்கங்கள் இடையிலான சிக்கல்களை தீர்த்து வைக்கும் அமைப்பு எது?

   அ) நாடாளுமன்றம்
   ஆ) உச்ச நீதிமன்றம்
   இ) உயர் நீதிமன்றம்
   ஈ) குடியரசுத்தலைவர்

7. இந்திய கூட்டாட்சி முறையை கூட்டுறவுக் கூட்டாட்சி என விவரித்தவர் யார்?

   அ) கிரன்வில் ஆஸ்டின்
   ஆ) டாக்டர் அம்பேத்கர்
   இ) ஜவஹர்லால் நேரு
   ஈ) வேர்

8. அரசமைப்பின் 262-ன் உறுப்பு எவ்வகையான சிக்கல்கள் சம்பந்தப்பட்டது?

அ) மாநிலங்களுக்கிடையேயான நதி நீர் சிக்கல்கள்
ஆ) மாநிலங்களுக்கிடையேயான சிக்கல்கள்
இ) மத்திய-மாநில சிக்கல்கள்
ஈ) சர்வதேச சிக்கல்கள்

9. சரியாக பொறுத்தபட்ட ஜோடியை கண்டுபிடிக்கவும்

| | | |
|---|---|---|
| அ) ஒன்றியப் பட்டியல் | - | இரண்டாவது பட்டியல் |
| ஆ) மாநிலப் பட்டியல் | - | முதலாவது பட்டியல் |
| இ) இதர அதிகாரங்கள் பட்டியல் | - | முதலாவது பட்டியல் |
| ஈ) பொதுப் பட்டியல் | - | மூன்றாவது பட்டியல் |

10. கீழ்கண்டவற்றைப் பொறுத்துக.

| | | |
|---|---|---|
| அ) சர்க்காரிய குழு | - | தமிழ்நாடு அரசாங்கம் |
| ஆ) இராஜாமன்னார் குழு | - | அகாளிதளம் |
| இ) ஆனந்த்புர் சாஹிப் தீர்மானம் | - | உச்ச நீதிமன்றம் |
| ஈ) பொம்மை தீர்ப்பு | - | மத்திய அரசாங்கம் |

அ) அ-அ, ஆ-ஆ, இ-இ, ஈ-ஈ
ஆ) அ-ஈ, ஆ-அ, இ-ஆ, ஈ-இ
இ) அ-அ, ஆ-ஈ, இ-இ, ஈ-ஆ
ஈ) அ-இ, ஆ-ஆ, இ-ஈ, ஈ-அ

11. இந்தியாவில் புதிய மாநிலங்கள் உருவாக்கும் முறையை தவறாக விவரிக்கும் கூற்று எது?

அ) அதிபர் புதிய மாநிலத்தை உருவாக்கும் சட்ட முன்வரைவை பரிந்துரைக்க வேண்டும்.
ஆ) அதிபர் அச்சட்ட முன்வரைவை சம்பந்தப்பட்ட மாநிலத்திற்கு அனுப்ப வேண்டும்.
இ) நாடாளுமன்றம் அரசியல் சாசன திருத்தச்சட்டத்தை இயற்றி புதிய மாநிலத்தை உருவாக்கும்.
ஈ) நாடாளுமன்றம் சாதாரன சட்டத்தை இயற்றி புதிய மாநிலத்தை உருவாக்கும்

12. இந்திய ஆட்சிப் பணி (ஐ.ஏ.எஸ்) போன்ற அனைத்து இந்தியப் பணிகளை நீக்குவதற்கு பரிந்துரைத்த குழு எது?

அ) புன்ச்சி குழு
ஆ) சர்க்காரிய குழு
இ) வெங்கடசெல்லையா குழு
ஈ) இராஜாமன்னார் குழு

13. கீழ்கண்டவற்றைப் பொறுத்துக.

| | | |
|---|---|---|
| அ) முதலாவது நிர்வாகச் சீர்திருத்தக் குழு | - | வீரப்ப மௌலி |
| ஆ) 2-வது நிர்வாகச் சீர்திருத்தக் குழு | - | மொரார்ஜி தேசாய் |
| இ) உறுப்பு 312 | - | பொதுப் பட்டியலுக்கான அதிகாரத்தை மாற்றும் உறுப்பு |
| ஈ) உறுப்பு 249 | - | அனைத்து இந்தியப் பணிகள் |

அ) அ-அ, ஆ-ஆ, இ-இ, ஈ-ஈ
ஆ) அ-ஈ, ஆ-அ, இ-ஆ, ஈ-இ
இ) அ-அ, ஆ-ஈ, இ-இ, ஈ-ஆ
ஈ) அ-ஆ, ஆ-அ, இ-ஈ, ஈ-இ



12th_Political Science_Tamil_Unit_5.indd 134 04-06-2019 11:50:43

14. **கூற்று (கூ):** மாநிலங்களுக்கிடையேயான நதி நீர் பிரச்சினைகளை உச்ச நீதிமன்றத்தின் அதிகார வரம்பில் இருந்து நீக்கி உறுப்பு 262-க்கு அரசமைப்பு ஒப்படைக்கின்றது.

**காரணம் (கா):** நதி நீர் பிரச்சனைகள் பல இலட்சம் மக்களின் வாழ்வாதாரங்கள் சம்பந்தப்பட்டது. ஆகவே சுமுகமான பேச்சு வார்த்தைகள் மூலம் அப்பிரச்சனைகளைத் தீர்க்க வேண்டும்.

அ) கூற்றும், காரணமும் சரியானவைகள் ஆகும். காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.

ஆ) கூற்றும் காரணமும் சரியானவைகளாகும். ஆனால் காரணம் கூற்றை சரியாக விளக்கவில்லை.

இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.

ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி.

## II. பின்வரும் கேள்விகளுக்கு மிகச் சுருக்கமாக பதிலளிக்கவும்

1. ஈரவை நாடாளுமன்றம் என்பதை விளக்கவும்.
2. நெகிழா அரசமைப்பு என்பதன் பொருள் என்ன?
3. நிலப்பரப்பு அதிகாரப் பகிர்வு என்றால் என்ன?
4. அனைத்து இந்தியப் பணிகள் எவ்வாறு கூட்டாட்சி முறையை பாதிக்கின்றன?
5. நிர்வாகச் சீர்திருத்தக் குழுவைப் பற்றி சிறு குறிப்பு எழுதுக.
6. புன்ச்சி குழு குறித்து சிறு குறிப்பு எழுதுக.
7. நமது அரசமைப்பில் உள்ள "மாநிலங்களின் ஒன்றியம்" என்பதன் பொருளை விளக்குக.

## III. கீழ்கண்ட கேள்விகளுக்கு சுருக்கமாக பதில் எழுதவும்.

1. இந்திய கூட்டாட்சியில் நிதி அதிகாரப் பகிர்வு எவ்வாறு வழங்கப்பட்டுள்ளது என்பதை கண்டறிக.
2. அரசமைப்பின் 356 உறுப்பு கூட்டாட்சியை எவ்வாறு பாதிக்கின்றது?
3. வெங்கடசெல்லையா குழுவைப் பற்றி எழுதவும்.
4. உச்ச நீதிமன்றத்தின் பொம்மை வழக்கு தீர்ப்பின் முக்கியத் தன்மைகளை விவரிக்கவும்.
5. இந்திய அரசமைப்பு பாதியளவு கூட்டாட்சியை வழங்குகிறது என்ற கூற்றை ஆய்வு செய்யவும்.
6. மண்டலக் குழுக்கள் என்றால் என்ன? கூட்டாட்சி முறையை அவைகள் எவ்வாறு வளர்க்கின்றன?
7. இராஜாமன்னார் குழுவின் முக்கியப் பரிந்துரைகளை விவரிக்கவும்.

## IV. கீழ்கண்ட வினாக்களுக்கு விரிவான பதில்களை எழுதவும்.

1. இந்திய அரசமைப்பில் வழங்கப்பட்டுள்ள மத்திய மாநில உறவுகளை பகுப்பாய்வு செய்யவும்.
2. மாநிலங்களுக்கு இடையிலான நதி நீர் சிக்கல்களை தீர்ப்பதற்கான அரசமைப்பின் அணுகுமுறையை ஆய்வு செய்யவும்.
3. சர்க்காரிய குழுவின் முக்கிய பரிந்துரைகளை விவரிக்கவும்.
4. இந்திய அரசமைப்பின் கூட்டுறவுக் கூட்டாட்சி முறையை பற்றி விரிவான விளக்கம் தருக.
5. இந்திய கூட்டாட்சி முறையின் முக்கிய சிக்கல்கள் மற்றும் கோரிக்கைகளை விவாதிக்கவும்.




12th_Political Science_Tamil_Unit_5.indd 135 04-06-2019 11:50:43

## இணையச் செயல்பாடு

### இந்தியாவில் கூட்டாட்சி – இந்திய அரசமைப்பு தொடர்பான இயங்கலை வினாடி வினா

**இச்செயல்பாட்டின் மூலம் இந்திய அரசமைப்பு பற்றி மேலும் அறிதல்.**




### படிகள்


*படி 1*: கீழ்க்காணும் உரலி/விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி இணையப் பக்கத்திற்குச் செல்க.

*படி 2*: இந்திய அரசமைப்பு தொடர்பான வினாக்களுக்குச் சரியான விடையைத் தேர்வு செய்க. விடையைச் சரிபார்த்துக் கொள்ள "ANSWER" என்பதைச் சொடுக்குக.


*படி 3*: "Next Question" என்பதைச் சொடுக்கி அடுத்தடுத்த வினாக்களுக்குச் செல்க. "FinishTest" என்பதைச் சொடுக்கி மதிப்பீடு செய்து கொள்க.



படி 1



படி 2



படி 3

**உரலி :**

https://www.edudose.com/gk/indian-constitution-quiz/

*படங்கள் அடையாளத்திற்கு மட்டும்.

B246_12_POLI_SCI_TM